கனி 6

# புதிய தேடல்

2025 ஜூன்

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்





ஆண்டு சந்தா : 130 | தனிப்பிரதி : 10


An ISO 22000:2018 Certified Company
Customer Care : 93602 19029
1800 425 8881, 1800 425 8370
நாஞ்சில்® பால்
Nourishes Life
(குழித்துறை மறைமாவட்ட நிறுவனம்)
Nanjil
Double Toned Milk
Nanjil
Toned Milk
Nanjil
Standardised Milk
Nanjil
Full Cream Milk
Cow Milk
പശുവിൻ പാൽ
Nanjil
CURD
Nanjil M Aqua
Nanjil
Nanjil
NANJIL
MANGO MILK
NANJIL
Ghee
Nanjil
Nanjil
Unsalted Cooking Butter
Nanjil
ஐஸ்கிரீம்
NANJIL INTEGRATED DAIRY DEVELOPMENT
Nanjil Milk Plant
Mulagumoodu - 629 167
Kanyakumari District.
fssai
10020042006511
12414009000306
12414009000307
Enjoy
life with ...
Nanjil
KULFI
Nanjil
KULFI
Nanjil
Ice cream
Strawberry
NANJIL
NANJIL
ICE CREAM
Italian
Delight
NANJIL
E.mail : nanjilmilk@gmail.com, Website : nanjilmilk.com

## புதிய தேடல்

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*

அருள் முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள் முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**

*தொடர்பு முகவரி*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் - 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்: newputhiathedal@gmail.com**

**தனிப்பிரதி : ₹ 10**

**ஆண்டு சந்தா : ₹ 130**

**ஆயுள் சந்தா : ₹ 2000**



### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| **பலவண்ண அட்டை வெளிப்பக்கம்** | : ₹ 12000 |
| **பலவண்ண அட்டை உள்பக்கம்** | : ₹ 7000 |
| **முழுப்பக்கம் கறுப்பு** | : ₹ 2000 |
| **அரைப்பக்கம் கறுப்பு** | : ₹ 1000 |




# ஆசிரியரின் அன்பு வரிகள்

அருள்முனைவர்.

**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**

**புதுப்பிறப்படைய புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

## நலமோடு, வளமோடு, மகிழ்வோடு

ஒரு ஆரோக்கியமான சமூகமானது நம்முடைய ஆரோக்கியமான இதயத்தில் இருந்து தான் உருவாகிறது. ஒவ்வொரு தனி மனிதனின் இதயமுமே தன்னைச் சுற்றிய சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கிறது. இறைவன் கொடுக்கிற கைகளையும், மன்னிக்கிற இதயங்களையுமே ஆசீர்வதிக்கிறார். ஏனெனில், அவர் இதயங்களை கவனிப்பவர் நம் முகமூடிகளுக்கு மயங்குபவரல்ல.

நலமோடு வாழ்தல் என்பது பிரச்சனைகளே இல்லாத வாழ்க்கையல்ல, ஆனால் எல்லா பிரச்சனைகளின் நடுவிலும் இறைவனோடு இணைந்து வாழ்கின்ற வாழ்க்கை!

உண்மையான வளம் என்பது நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என்பதல்ல, நம்மிடம் இருப்பதிலிருந்து எவ்வளவு நாம் கொடுக்கிறோம் என்பது!

உண்மையான மகிழ்வு என்பது வாழ்க்கையில் கேளிக்கைகளை தேடி ஓடுவது அல்ல, வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்ற ஓடுவதில்!

நாம் விளக்கு என்றார் இயேசு.விளக்கு என்பது நமது வரவேற்பறைகளுக்கு அழகூட்டுவதற்கானதல்ல கரடு முரடான பாதைகளில் நடப்பவர்களுக்கு வழி காட்டுவதற்கானது, நேர்மையாய் நடப்போம், எல்லா செயல்களிலும் உண்மையையும் வெளிப்படை தன்மையையும் பேணுவோம், பிறருக்கு நலன்களை பொழிகின்ற வாழ்க்கையை வாழ்வோம்; குரல் அற்றவர்களின் குரலாக, வசதியற்றவர்களின் ஊன்றுகோலாக, எளியோரின் ஏணியாக இறைவனின் ஆதரவை ஜெபத்தின் மூலமாய் தேடுவோம் உடல் சார்ந்த தேவைகளையும் உள்ளம் சார்ந்த தேவைகளையும் இணைந்து செய்வோம்.

ஏனெனில் மனிதனின் வாழ்க்கை என்பது உலகிலிருந்து பிரிந்து வேற எங்கோ செல்வதல்ல, உலகில் இருந்து கொண்டே உலகையே மாற்றுவது. அப்போதுதான் உண்மையான நலமோடும், வளமோடும், மகிழ்வோடும் நம் அயலானும் வாழ முடியும். அதுவே மனித மாண்பு, அதுவே கிறிஸ்தவ வாழ்வு, வாழ்வோம் நலமோடு, வளமோடு, மகிழ்வோடு, இறைவனின் துணையோடு.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்க புதிய தேடல்**
**வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

*"உயர பறக்க இறக்கைகள் தேவையில்லை*
*ஏதோ ஓர் இலட்சியம் இருந்தால் மட்டும் போதும்."*

மனிதர்கள் அனைவருமே நலமாகவும், வளமாகவும், மகிழ்வாகவும் வாழவே ஆசைப்படுகிறார்கள். நம்முடைய இறைவேண்டல்கள் அனைத்துமே இவற்றை முன்னிறுத்தியே அமைகின்றன. சமூக நலன் விரும்பும் அனைவருமே இதையே விரும்புகிறார்கள். ஆனால், இந்த நலமும் மகிழ்வும் வளமும் தனக்கு மட்டும் வேண்டும் என்று விரும்புவதால் தான் பிரச்சனைகளே உருவாகின்றன.

'**நான்**', '**எனக்கு**' என்கிற சுயநலம் பிறரது நலத்தையும் மகிழ்வையும் வளத்தையும் பறித்து விடுகிறது. இதனால், இந்த நாடு மட்டுமல்ல, உலகமே அமைதி இழந்து காணப்படுகிறது. ஒரு சாரார் மகிழ்வோடும் இன்னொரு சாரார் மகிழ்வு இன்றியும் வாழ்வதற்கு இதுவே காரணமாகும். நாம் மேற்சொன்ன கொள்கை அல்லது ஆவல் பொதுநலம் கொண்டதாக அமையும் போது சுயநல அரசியல், அதனால் விளையும் வன்முறைகள், யுத்தங்கள், ஏற்றத்தாழ்வுகள், பசி பட்டினிகள், சாதி சமய வெறிகள் எல்லாம் ஒழிந்து இறைமகன் விரும்பிய இறையாட்சி இம்மண்ணில் மலரும். அதற்காக நாம் அனைவரும் உழைக்க வேண்டும்.

வெறும் வாய் சொல்லில் மட்டும் வீரர்களாக இல்லாமல் செயலில் தீவிரம் காட்ட வேண்டும். 'சொற்களை விட செயல்கள் தாம் உரத்து பேசும்' என்பது முன்னோர் பழமொழி. அதன் உண்மை உணர்ந்து, காலத்தின் அறிகுறி அறிந்து, நலத்தையும், வளத்தையும், மகிழ்வையும் மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழும் புதிய தலைமுறையாக உருவாக்கம் பெறுவோம். குறிப்பாக உலக நாடுகள் அமைதியில் பூத்துக் குலுங்கவும், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற சிந்தனையோடு ஒழுகவும் இறைவனிடம் வேண்டுவோம். இந்த மாதம் உங்களுக்கு இனிய மாதம் ஆகட்டும்!

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ G. Albert

மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்

கனி 06 அகல் 15 ஜூன் 2025


| எண் | படைப்பு |
|---|---|
| 1. | ஆசிரியரின் அன்பு வரிகள் |
| 2. | ஆயரின் அமுத மொழிகள் |
| 3. | திருஅவையின் புதிய தலைவரை ...... வரவேற்போம் |
| 4. | ஒற்றுமை - ஒருமைப்பாடு - கூட்டுறவு |
| 5. | விளையாட்டு வாழ்வின் கொடை |
| 6. | புகை நமக்கு பகை |
| 7. | நீதி நிலைக்கட்டும் |
| 8. | புனித தேவசகாயம் பற்றி முன்னாள் . திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் |
| 9. | எளிய வாழ்க்கையில் பெரிய மனிதர்கள் |
| 10. | மருத்துவமும் இறைமையும் |
| 11. | உயிரியல் பூங்கா நன்மைகள் .......... மேம்படுத்தும் வழிமுறைகள் |
| 12. | மறைந்த திருத்தந்தை |
| 13. | மன்னிப்பு கிறிஸ்தவத்தின் அடையாளம் |
| 14. | பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள் |
| 15. | ஆயரின் அலுவல்கள் |



# திருஅவையின் புதிய தலைவரை வரவேற்போம்

**Rev. Dr. ச. சேவியர் பெனடிக்ட் DCL**
(மறைமாவட்ட முதன்மைப் பணியாளர், குழித்துறை மறைமாவட்டம்)

திருத்தந்தை பிரான்சிஸின் மறைவிற்குப் பின் அகில உலகத் திருஅவை ஒருவித வெறுமையையும் வெற்றிடத்தையும் உணர்ந்தது. திருஅவையின் அடுத்தத் தலைவர் யார்? தற்பொழுது கர்தினால்களாக இருப்பவர்களில் யாருக்கு வாய்ப்பு அதிகம்? எப்படிப்பட்ட பண்புகளும் திறமைகளும் கொண்டவர்? திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இன்றைய சவால்களை எதிர்கொண்டு சரியான பாதையையும் பயணத்தையும் தீர்மானிப்பார்? அவர் முற்போக்கு சிந்தனை கொண்டவராக இருக்க வேண்டுமா? அல்லது வலதுசாரி சிந்தனை கொண்டவராக இருக்கவேண்டுமா? வருகின்றவர் திருத்தந்தை பிரான்சிஸ் முன்னெடுத்தப் பணிகளை தொடர்வாரா? என்ற கேள்விகளை மையமாகக் கொண்டு அனல் பறக்கும் விவாதம் உலகத்தின் அனைத்து தொடர்பு ஊடகங்களையும் பற்றிக்கொண்டது.

புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுக்க ரோமையில் அமைந்துள்ள சிஸ்டையின் ஆலயத்தில் 07-05-2025 அன்று காலையில் 133 கர்தினால்கள் கூடினர். நான்காவது வாக்கெடுப்பின் முடிவில் எவரும் எதிர்பாராத ஒருவராக அமெரிக்க நாட்டைச்சார்ந்த கர்தினால் இராபர்ட் பிரான்சிஸ் பிறிவோஸ்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**மந்தையின் மணம் அறிந்த திருத்தந்தை**

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் 1955 ஆம் ஆண்டு பிறந்த இராபர்ட் பிரான்சிஸ் பிறிவோஸ்ட் புனித அகஸ்டின் துறவற சபையில் இணைந்து 1982 ஆம் ஆண்டு அருள்பணியாளராக அருள்பொழிவு செய்யப்பட்டார். பெரும்பாலான அவரது அருள்பணி பெருநாட்டில் அடித்தட்டு மக்களுக்கான பணியாகவே இருந்தது. பெருநாடு 95% கிறிஸ்தவர்களை கொண்ட நாடு வறுமை, ஊழல், சுகாதாரக் குறைபாடு ஆகியவற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடு, நிலைத்த தன்மையற்ற அரசு மக்கள் நலனில் அதிக அக்கரை கொள்ளவில்லை. கோவிட் பெருந்தொற்றின்போது அதிகமான மக்கள் மரணமடைந்த நாடுகளில் ஒன்று பெரு. இந்த நாட்டில் அருட்பணியாளராகவும் ஆயராகவும் பிறிவோஸ்ட் செய்த பணிகள் உழைக்கும் மக்களின் ஏக்கங்களை உணர்ந்த, உலகத் திருஅவையின் தேவையை புரிந்த தலைவராக அவரை மாற்றியது.

**பிரிவினை சுவர் உடைத்து உறவுப்பாலம் அமைப்பவர்**

திருத்தந்தை பதினான்காம் லியோ துறவற சபை அருள்பணியாளர். திருத்தூதுப்பணியில் ஆர்வம் கொண்டவர். திருச்சபை சட்ட வல்லுநர், கணித ஆசிரியர், அமெரிக்காவில் பிறந்தவர். தென்பகுதியான பெருநாட்டில் பணியாற்றியவர். இந்த அற்புதமான ஞானக்கலவை வலதுசாரி, இடதுசாரி என்று கொள்கைகளால் பிளவுபட்டு நிற்கும் உலகை இணைக்கும் சக்தியாக அமையும். திருஅவையின் மரபுச்செல்வத்தை முற்றிலும் மறுதலிக்காமல் மறுமலர்ச்சியை நோக்கி வழிநடத்தும் திருத்தந்தையாக இவர் விளங்குவார். இறைநம்பிக்கையையும் சமூக நீதியையும் கரம் கோர்த்து நடக்கச் செய்யும் ஆற்றல் கொண்டவராக இருப்பார். திருத்தந்தை பிரான்சிஸின் கனவுகளான இணைந்து பயணிக்கும் திருஅவையை கட்டமைப்பது, இயற்கையை பேணுவது, போர்கள் இல்லாத அமைதியான உலகை உருவாக்குவது, எல்லோருக்கும் இரக்கம் காட்டுவது, புலம்பெயர்ந்தோரை பாதுகாப்பது, சமத்துவத்தை நிலைநாட்டுவது ஆகிய நற்செயல்கள் தொடர

முனைந்து செயலாற்றும் திருத்தந்தையாக திருத்தந்தை பதினான்காம் லியோ விளங்குவார் என்பது உறுதி.

**உழைக்கும் மக்களின் குரலாக**

காதினால் பிறிவோஸ்ட் ஏன் இரண்டாம் பிரான்சிஸ் என்ற பெயரை தேர்ந்தெடுக்காமல் திருத்தந்தை பதினான்காம் லியோ என்ற பெயரை தேர்ந்தெடுத்தார் என்பது ஊடகங்களில் அதிகம் விவாதிக்கப்பட்ட ஒன்று. திருத்தந்தை 13 ஆம் லியோ தொழிலாளர்கள் நலனுக்காக அதிகம் குரல் கொடுத்தவர். "**தொழிலாளர் சாசனம்**" என்ற திருத்தூது ஏட்டை எழுதியதன் வழியாக தொழிலாளர்களின்மீது திருஅவையின் கவனத்தையும் உலகின் கவனத்தையும் திருப்பியவர். சமூகநீதி என்பது அவரது முக்கிய கரிசனையாக இருந்தது. அன்னை மரியாள் மீது மிகுந்த பக்தி கொண்டவராக இருந்தார். ஜெபமாலை ஜெபிப்பது குறித்து பதினொன்று திருத்தூது மடல்களை எழுதியுள்ளார். எனவே, ஜெபமாலையின் திருத்தந்தை என்றே அழைக்கப்பட்டார். திருத்தந்தை 13 ஆம் லியோவைத் தொடர்ந்து தானும் தொழிலாளர் நலன் பேணுபவராக, சமூகநீதியை காப்பவராக, இறைநம்பிக்கையை தூண்டுபவராக விளங்க வேண்டும் என்ற நோக்குடன் பதினான்காம் லியோ என்ற பெயரை தேர்ந்தெடுத்திருக்கலாம் என்பது மக்களின் நம்பிக்கை.

**இந்திய நாட்டை புரிந்து கொண்ட திருத்தந்தை**

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் புனித அகஸ்டின் துறவற சபையின் தலைவராக இருந்தபோது 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கேரளாவில் உள்ள விராப்போளி மறைமாவட்டத்தில் மரியாபுரத்தில் அமைந்துள்ள புனித அகஸ்டின் துறவற சபை மடத்திற்கு வருகை தந்தார். மீண்டும் 2006 ஆம் ஆண்டு மரியாபுரத்திற்கு வருகைதந்து அங்கிருந்து தமிழ்நாட்டில் பொள்ளாச்சியில் புனித அகஸ்டின் துறவற சபையினரால் நடத்தப்படும் கல்விக்கூடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டார். தன் சபையை சார்ந்த அருள்பணியாளர்கள் பணிபுரியும் கிராமங்களுக்கும் சென்று சந்தித்து தேவையான உதவிகளைச் செய்யும் உயர்ந்த உள்ளம் கொண்ட நம் திருத்தந்தை இந்திய கிராமங்களின் நிலையை புரிந்து கொண்டவர் என்பதில் ஐயமில்லை.

**பின்நவீன காலத்தின் சவால்கள்**

நாம் வாழும் காலத்தை நான்காவது தொழில்புரட்சியின் காலம் என்று வரையறுத்துள்ளனர். முதல் தொழில்புரட்சியின் காலம் என்பது நீராவி சக்தியையும், நீர்மின் சக்தியையும் கண்டறிந்த காலம். இரண்டாவது தொழில்புரட்சி என்பது இயந்திரமயமாக்கப்பட்டு நவீன உற்பத்தி முறையை ஏற்படுத்திய காலம். மூன்றாவது தொழில்புரட்சி தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, கணினி கண்டுபிடிப்பு, இணையதளத்தின் வரவு ஆகியவற்றை உள்ளடக்கியது. நான்காவது தொழில்புரட்சி என்பது செயற்கை நுண்ணறிவை எல்லாத் தளங்களிலும் பயன்படுத்தும் காலம். குறிப்பாக, மனித மூளையின் செயல்பாட்டை இயந்திரத்தில் இணைக்க முடியுமா? என்று முயற்சி செய்து வெற்றியின் படியில் விஞ்ஞானிகள் கால்வைக்கும் காலம் இது. இச்சூழலில் வாழ்வியல் அறநெறிகள்பற்றிய கேள்விகள் எழுகின்றன.

மேலும் தன்பாலின் ஈர்ப்பு கொண்டவர்களின் திருமணம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போர்களும் பிரிவினைகளும், புலம்பெயரும் மக்களின் பாதுகாப்பு, திருஅவையில் பெண் சமத்துவம், பொருளாதார ஏற்றத்தாழ்வு என பல்வேறு சவால்கள் திருஅவையின் முன்னின்று அச்சுறுத்துகின்றன. இவற்றை எதிர்கொண்டு திருஅவையின் சார்பாக தூய ஆவியின் வழிகாட்டுதலில் நம் திருத்தந்தை அவர்களால் தக்க பதில்களை தர இயலும்.

பல்வேறு தளங்களில் இறைமகன் இயேசுவின் பெயரால் மக்கள் பணியாற்றிய அனுபவத்தோடு அகில உலக திருஅவையின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் நம் திருத்தந்தையை வரவேற்போம். அவர் பணி சிறக்க நம் அன்றாட இறைவேண்டல்களில் அவரை நினைவில் கொள்வோம்.

# ஒற்றுமை – ஒருமைப்பாடு – கூட்டுறவு

சிறார் பக்கம்

அருள்பணி. இரா. மேரி ஜான்

பல ஆண்டுகளுக்கு முன்பு நான் எங்கோ படித்த ஒரு கதை இது.

ஒரு சிறுவனுடைய வலது கையில் உள்ள ஐந்து விரல்களுக்கிடையே ஒரு சண்டை ஏற்பட்டது. தங்களில் யார் மிக முக்கியமானவர் என்று தீர்மானிப்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடே அந்தச் சண்டைக்குக் காரணம்.

பெருவிரல் எனப்படுகிற கட்டை விரல் சொன்னது: "நான் இல்லாமல் உங்களால் எதுவும் செய்ய இயலாது. நீங்கள் எதையாவது உறுதியாகப் பிடிக்க வேண்டுமென்றால் ஒரு பக்கத்தில் நான் நின்று உதவ வேண்டியுள்ளது. ஆதலால் நான்தான் மிக முக்கியமானவன்."

அதற்கு அடுத்ததாய் இருந்த சுட்டுவிரல் சொன்னது: "அடுத்தவர்களோடு தொடர்பு கொள்வதற்கு நான் தேவை. யாராவது ஏதாவது எங்கே என்று கேட்டால் அதைச் சுட்டிக் காட்டுவது நான்தானே? பிறருக்குப் பதில் சொல்கிறவர்கள்தானே சமூகத்தில் முக்கியமானவர்கள்? முக்கியமானவன்?" அப்படியென்றால் நான்தானே.



அதைக் கேட்டுக்கொண்டிருந்த நடுவிரலுக்குக் கோபம் வந்தது. உடனே அது சொன்னது: "நீங்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? நாம் அனைவரும் எழுந்து நின்று நம்மில் யார் உயரமானவர் என்று பார்ப்போம். நான்தானே மிக உயரமாய், எல்லாருக்கும் தலைவன்போல் நிற்கிறேன்? அப்படியென்றால் நான் உங்களைவிட முக்கியமானவன் இல்லையா?"

அதற்கு அடுத்ததாய் இருந்த மோதிர விரல் அமைதியாய், ஆனால் சற்று தற்பெருமையோடு சொன்னது: "ஒரு குழுவில் யாரை அதிகமாகக் கவுரவிப்பார்கள்? மிக முக்கியமானவரைத் தானே? தம் உரிமையாளர் யாரை மோதிரம் அணிந்து கவுரவிக்கிறார்? என்னைத்தானே? நீங்கள் வீணாய் ஏன் சண்டை போடுகிறீர்கள்? நான்தான் மிக முக்கியமானவன் என்று ஏற்றுக்கொண்டு அமைதியாகப் போக வேண்டியதுதானே?"

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சிறுவிரல் அமைதியாகச் சொன்னது: "முக்கியமான விருந்தினர் யாராவது வந்தால் முன்னின்று அவரை வரவேற்பவர்தானே முக்கியமானவராய் இருப்பார்? நம் உரிமையாளருடைய வீட்டுக்கு யாராவது வருகை தந்தால் அவரைக் கரம் கூப்பி வணங்கும்போது முன்னே நிற்பது யார்? நானும் அடுத்த கையில் உள்ள என் சகோதரனும்தானே? அப்படியென்றால் நாங்கள்தானே மிக முக்கியமானவர்கள்?"

எந்த விரலும் விட்டுக்கொடுக்க முன்வரவில்லை சற்று ஓய்வு கிடைக்கும்

போதெல்லாம் சண்டை தொடர்ந்துகொண்டே இருந்தது. இறுதியில் இதற்கு ஒரு தீர்வு காண நடுவர் ஒருவரை அணுகின. அவரிடம் ஒவ்வொரு விரலும் மேற்சொன்னது போன்று தன் அருமை பெருமையை எல்லாம் சொல்லிவிட்டு, "இதில் எங்களுக்கு ஒரு முடிவை எட்ட இயலவில்லை. தாங்கள்தான் நல்ல ஒரு தீர்ப்பு சொல்லி எங்களுடைய சண்டையைத் தீர்த்து வைக்க வேண்டும்" என்றன.

எல்லா விரல்களுடையவும் உயர்வுக்கான காரணங்களைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த நடுவர் பேசத் தொடங்கினார்.

"நீங்கள் ஒவ்வொருவரும் சொல்வது உண்மைதான். ஆனால் ஒவ்வொருவரும் சொன்னது மட்டும்தான் உங்கள் ஒவ்வொருவருடையவும் பணியா? உண்மையில் நீங்கள் யாருக்காய் இருக்கிறீர்கள்? உங்களுக்காகவா?" என்று கேட்டார்.

அதற்கு எல்லா விரல்களும், "எங்களுக்காய் அல்ல. எங்கள் உரிமையாளருக்காய்" என்றன.

நடுவர் தொடர்ந்தார்: "மிகவும் சரி. உங்கள் உரிமையாளருக்காக நீங்கள் நிறைய வேலைகள் செய்கிறீர்கள் அல்லவா? எந்த வேலையாவது உங்களில் ஒரு விரல் மட்டும் தனியாகச் செய்ய இயலுமா?"

எல்லா விரல்களும், "இயலாது" என்றன.

நடுவர் தொடர்ந்து சொன்னது: "இயலாது அல்லவா? நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு இணைந்தால்தானே எல்லா வேலைகளையும் நன்றாகச் செய்ய இயலும்?"

அதற்கு எல்லா விரல்களும் "ஆம்" என்றன.

நடுவர் சொன்ன தீர்ப்பு: "உங்களுக்குள்ளே சண்டை வேண்டாம். நீங்கள் எல்லாருமே ஒரே அளவில் முக்கியமானவர்கள். ஒரே அளவுக்கு உயர்ந்தவர்கள். எல்லாரும் இணைந்து ஒற்றுமையுடனும் கூட்டுறவுடனும் செயல்படும் போதுதான் எந்தச் செயலையும் ஆற்ற இயல்கிறது."

யார் பெரியவர்? யார் மிக உயர்ந்தவர்? இவை போன்ற விவாதங்களும் சண்டைகளும் தேவையற்றவை. எல்லாரும் அவரவருக்கு இயன்ற வகையில் இணைந்து செயல்பட்டால் சமூகத்தில் நன்மைகள் விளையும்.

நம் உடல் உறுப்புகள் இவ்வாறு இணைந்து செயல்படுகின்றன. வயிற்றில் பசியை உணர்கிறோம். கண்களும், வாசனையை உணர்கிற மூக்கும் உணவு இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கின்றன. கால்கள் அந்த இடத்துக்கு நம்மைக் கொண்டு செல்கின்றன. நாவு "உணவு வேண்டும்" என்று கேட்கிறது. கைகள் உணவைப் பெற்றுக் கொள்ளவும் அதனை உட்கொள்ளவும் உதவுகின்றன. வாயின் உள்ளே உள்ள நாக்கு, பற்கள், உமிழ்நீர்ச் சுரப்பிகள் ஆகியவை உணவை உண்பதற்குப் பக்குவப்படுத்துகின்றன. உணவுக் குழல் உணவை வயிற்றுக்குக் கொண்டு செல்கிறது. வயிறும் உள்ளே உள்ள சிறுசிறு உறுப்புகளும் உணவை அரைத்துச் செரிக்க வைக்கின்றன. எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தம் உணவிலுள்ள சத்துப் பொருள்களைத் தேவைக்கேற்ப உடலின் பாகங்களுக்கு எடுத்துச் செல்கிறது. இவை அனைத்தையும் மூளை இயக்கிக்கொண்டிருக்கிறது. எத்துணை அருமையான ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கூட்டுறவும்! "வயிற்றுக்குத்தானே பசி! அதுவே பார்த்துக்கொள்ளட்டும்" என்று மற்ற உறுப்புகள் ஒத்துழைக்காமல் இருந்தால் பசி தீருமா? உயிர்கள் வாழ இயலுமா?

மனித சமூகத்தை உயிருடன் வைத்திருப்பவை **ஒற்றுமை, ஒருமைப்பாடு, கூட்டுறவு** ஆகியவையே.




# விளையாட்டு வாழ்வின் கொடை

ஜெ. அபிஸ் ரோஜின்

"ஒழுங்காக முறைப்படுத்தப்பட்ட உடற்பயிற்சி, விளையாட்டு இறைவனை மகிழ்விக்கக் கூடிய இறை வேண்டல் ஆகும்."– புனித லொயோலா இஞ்ஞாசியார்

உடற்பயிற்சி வாழ்விற்கு இன்றியமையாதது அதன் ஒரு பரிமாணம் விளையாட்டு. விளையாட்டு என்பது மனித வாழ்வின் ஒருபக்கமாக மட்டுமல்ல, முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் இருக்கிறது. இன்று உலகம் முழுவதும் விளையாட்டுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் உடல் வளர்ச்சிக்கு மட்டுமல்ல மனிதரின் உள்ளார்ந்த நற்குணங்களை வளர்க்கும் சிறந்த வாயிலாகவும் அது இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. விளையாட்டு இன்று பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும், சமூக நிறுவனங்களிலும் கட்டாயமாக கற்றுத் தரப்படும் ஒரு வாழ்க்கைமுறை ஆகியிருக்கிறது என்பது சிறப்பு. விளையாட்டு இரு களங்களில் நம்மை மேம்படுத்துகிறது.

1. உடல் மேம்பாடு (Physical development)
2. உள மேம்பாடு (Character development)



**1. உடல் மேம்பாடு**

"உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள் என்று தெரியாதா?" (1 கொரி 6:5) என்ற பவுலின் வார்த்தைகள், அத்தகைய கிறிஸ்துவின் உறுப்புகளாகிய நமது உடல்களை நாம் நன்றாகப் பேண வேண்டும் என அறைகூவல் விடுக்கிறது. "உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே, உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்" (1கொரி 6:19-20) ஆவியாரின் ஆலயங்களைத் தூய்மையாகப் பேணுதல் என்பது நமது உடலை ஆரோக்கியமாகவும் வலுவானதாகவும் பேணுதல் ஆகும். விளையாட்டு நம்மை உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும், புத்துணர்வோடு வலிமையாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது. நாம் உடல் நலத்தோடு உளநலத்தையும் வளர்த்துக் காத்துக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் அமைகிறது.

ஒரு விளையாட்டு வீரர் போதைப் பழக்கங்களுக்கும் அடிமையாக இருப்பதற்குரிய வாய்ப்புகள் குறைவாகவே இருக்கின்றன. பொதுவாக ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருக்கும்போது அவரது மூளையில் டோப்பமின் என்னும் ஒரு சுரப்பி சுரக்கிறது. இது அவரை அந்தப் போதைப் பொருளை நோக்கி உந்தித் தள்ளுகிறது. போதைப் பொருளிலேயே அவரை நிறைவு காணச்செய்கிறது. இது போதைப் பொருள்கள் பயன்படுத்தும் போது மட்டும் சுரக்கும் சுரப்பி அல்ல. மாறாக வெற்றி, மகிழ்ச்சி, இன்பம், சாதனை, பாராட்டுக்கள் பெறும்போதும் சுரக்கும் ஒரு சுரப்பியாக இருக்கிறது. இந்த சுரப்பிக்கு ஆங்கிலத்தில் ரிவார்ட் கெமிக்கல் என்று பெயர். ஒரு விளையாட்டு வீரர் அந்த விளையாட்டில் முதன்மை பெற்றவனாக விளங்க வேண்டும்

என்பதையே இலக்காகக் கொண்டிருப்பார். அந்த விளையாட்டில் அவர் வெற்றி பெற்று சாதிக்கும் தருணங்களில் டோப்பமின் சுரப்பி சுரக்கிறது. இதன் காரணமாக அந்த விளையாட்டு வீரர் விளையாட்டில் சாதனை புரிவதையே தன் வாழ்வின் நிறைவாகக் கருதுவார். எனவே, அவர் எந்த போதைப் பழக்கத்திலும் அடிமையாக இருப்பதில்லை. உலக சுகாதார அமைப்பு 2024 ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில் தினமும் உடற்பயிற்சி மற்றும் விளையாடுபவர்களின் ஆயுட்காலம் மற்றவர்களை விட 20-30% அதிகமாக உள்ளதாகக் கூறுகிறது.

**2. உள மேம்பாடு**

புனித 2 ஆம் ஜான் பவுல் 1985 இல் இத்தாலிய ஒலிம்பிக் குழுமத்தோடு உரையாடு கையில் "உடற்பயிற்சி வெறுமனே உடல்களின் அசைவு அல்ல, அது ஓர் ஒழுக்கநெறி", நம் உடலோடு ஆன்மாவை இணைக்கும் ஓர் ஆன்மீகப் பயணம் என கூறுகிறார். பல நேரங்களில் விளையாட்டு என்பது உடலளவில் மட்டுமே நமக்கு நன்மை விளைவிக்கிறது என்ற சிந்தனையோடு வாழ்கிறோம். ஆனால், ஒருவரது உளவியல் நலன்களை உருவாக்குவதில் விளையாட்டு பெரும் பங்கு வகிக்கிறது.

ஓர் அணியை நல்ல முறையில் வழிநடத்துவதன் மூலம் ஒருவருக்குத் தலைமைத்துவப் பண்பு வளர்கிறது. விளையாட்டில் பலர் இணைந்து குழுவாக விளையாட வேண்டிய நிலை இருக்கும். இதன் மூலம் மற்றவர்களை மதிக்கவும், குழுவாக ஒரே இலக்கை நோக்கி வேலை செய்யவும் பழகுகிறோம். வெற்றி மட்டுமில்லாமல் தோல்வியையும் அனுபவிக்க வேண்டிய நேரம் விளையாட்டில் வரும். இது நம்மை எதிர்கால வாழ்வில் வரும் தோல்விகளை எதிர் கொள்ள உதவுகிறது. விளையாட்டு நடைபெறும்போது சண்டை சச்சரவுகள் நிகழலாம். ஆனால், ஆட்டம் முடிந்ததும் சிரித்துக்கொண்டே கைகுலுக்கிச் செல்லும் போது உறவைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பையும் பிறரைப் பொறுத்துக் கொள்ளும் பண்பையும் வளர்க்கிறது. பயிற்சி மற்றும் தொடர்ச்சியான உழைப்பு இல்லாமல் எந்த விளையாட்டிலும் வெற்றி பெற முடியாது. இது வாழ்க்கையிலும் வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக உதவுகிறது. விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நியாயமாக விளையாடும் பழக்கம் வாழ்க்கையிலும் நேர்மையான முறைமையைக் கடைப்பிடிக்க உதவுகிறது. விளையாட்டு வீரர்கள் தங்களது இலக்கை அடைய வேண்டும் என்று முழு முயற்சியோடு அவர்களுக்கென்று தனியாக கால அட்டவணை தயாரித்து அதன்படி ஒழுக்கமாக வாழும் முறையை கற்றுக் கொள்கிறார்கள். விளையாட்டின்போது வீரர்கள் தங்களது திறமைகளை சூழலுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இது வாழ்வைச் சுமைக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கும் திறனைக் கற்றுத் தருகிறது. இவ்வாறு வாழ்வில் கட்டுப்பாடு, பொறுமை, ஒழுக்கம், நேரத்திற்கு மதிப்பு கொடுப்பது ஆகிய பண்புகளும் வளர்கின்றன. தோல்வியை ஏற்கும் திறன், வெற்றியைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை, குழுவில் பணியாற்றும் ஒத்துழைப்பு போன்றவை விளையாட்டின் மூலம் நாம் பெறக்கூடிய நன்மைகள் ஆகும்.

இவ்வாறு விளையாட்டு என்பது பொழுதுபோக்கு நிகழ்வாக மட்டுமல்லாமல் நமது மனநலம், உடல்நலம் மற்றும் உள நலத்தை மேம்படுத்தும் ஒரு பயிற்சிக்களமாக அமைகிறது. நம் பிள்ளைகளைக் கைப்பேசி பயன்படுத்தி இணையதள விளையாட்டுகள் விளையாடுவதைத் தவிர்த்து உடலுக்கும் மனதிற்கும் ஆற்றலையும் ஊக்கத்தையும் தரும் உண்மையான விளையாட்டை விளையாட உற்சாகப்படுத்துவோம். விளையாட்டு என்பது தம் வாழ்வின் வரம் என்பதை நினைவில் கொள்வோம்.

**"ஒரு விளையாட்டு வீரர் புதியவற்றைக் கற்றுக் கொள்வதில் ஆர்வமும் தன்னை வளர்த்துக் கொள்வதில் முனைப்பும் காட்ட வேண்டும். குறிப்பாக ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வேண்டும்"**. என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.



# புகை நமக்கு பகை

அருள்முனைவர் **து. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்**
இயக்குநர், திருப்புமுனை போதைநோய் நலப்பணி, கோட்டாறு மறைமாவட்டம்.

**அறிமுகம்** : புகை நமக்கு கொடுப்பது ஒரு மெதுவான இறப்பு. புகை ஒரு பொழுது போக்கல்ல. பழக்கமல்ல. புகை நம் உயிரை நாமே கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லும் ஒரு கொலை. உலக சுகாதார அமைப்பின் (2023) கணக்குப்படி, ஆண்டுதோறும் 80 லட்சம் பேர் இந்த நச்சுப்பொருளின் பிடியில் தங்கள் உயிரை இழக்கின்றனர். இந்தியாவில் மட்டும் 13 லட்சம் பேருக்கு புகையின் தாக்கத்தால் வாழ்நாள் குறைகிறது. ஒவ்வொரு சிகரெட்டும் நம் வாழ்நாளிலிருந்து 11 நிமிடங்களைப் பறிக்கிறது. குடும்பத்தில் குழந்தையின் சிரிப்பும், மனைவியின் புன்னகையும், வாழ்வின் ஒளியும்தான் அந்த நச்சுப் புகையில் சாம்பலாகின்றன. இதுதான் முடிவெடுக்க வேண்டிய தருணம். இன்று நாம் எடுக்கும் புகை நமக்குப் பகை என்ற முடிவே நமது எதிர்காலத்தை சீரானதா அல்லது சீரற்றதா என்பதை நிர்ணயிக்கும்.

**புகையின் வடிவங்கள் ஒரு பார்வை** : புகை சிகரெட், பீடி, ஹூக்கா, இ-சிகரெட், சுருட்டு, பான்பராக், குட்கா என பல வடிவங்களில் வருகிறது. ஒவ்வொன்றும் புகை என்ற ஒரே விஷத்தை நம்முள் செலுத்தி, நம் உடலையும் வாழ்வையும் சீரழிக்கின்றன. வணிகத்துறையில் புகை அழகாக விளம்பரப்படுத்தப்படுகிறது. ஆனால் அதற்குள்ளே நிக்கோட்டின், டார் போன்ற நச்சுப்பொருட்கள் உள்ளன. இவை நம் மூச்சையும், உடலையும், நரம்புகளையும், மூளையையும் தாக்குகின்றன. இளம் தலைமுறையை அதிரடியாக பாதிக்கும் இந்த விஷ வடிவங்கள் மிக ஆபத்தானவை நாம் இது பற்றிய உண்மையை அறிந்து விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

**உடல் பாதிப்புகள்** : புகை நம் உடலைத் தொடக்கத்தில் பாதிக்காமல் இருப்பதுபோல தோன்றலாம். ஆனால் நாளாக நாளாக அது நம்மை உட்புறமாக முதலில் சிதைக்கிறது. நுரையீரல் புற்றுநோய், வாய்ப்புற்றுநோய், இதயநோய், இரத்த அழுத்தம் போன்றவை உருவாகின்றன. இந்திய புற்றுநோய் பதிவின் தகவல்படி (2021), புகைபிடிப்பவர்களில் 42% பேர் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். ஒரு சிகரெட்டில் 4000 வேதிப்பொருட்கள் உள்ளன. அதில் புற்றுநோய் ஏற்படுத்தும் 69 வகையான வேதிப்பொருட்கள் இருக்கின்றன. புகை உடலை மெதுவாக, ஆனால் உறுதியாக அழிக்கிறது. உடலை பாதுகாக்க வேண்டுமெனில் புகையை விலக்கியாக வேண்டும்.

**மனப் பாதிப்புகள்** : புகை மனதையும் ஆழமாக பாதிக்கிறது. நிக்கோட்டின் மூளையில் உற்சாகத்தை கொடுத்து தற்காலிக இன்ப உணர்வை ஏற்படுத்தி, பின்னர் மனச்சோர்வை வளர்க்கிறது. தூக்கமின்மை, கவலை, குற்றஉணர்வு போன்றவை ஏற்படுகின்றன. உலக சுகாதார அமைப்பின் (2022) படி, புகைபிடிப்பவர்களில் தற்கொலை எண்ணம் 25% அதிகம். புகை நம் மனஅமைதியை சீர்குலைக்கும் ஒரு நச்சாக மாறுகிறது.

**குடும்பப் பாதிப்புகள்** : புகை ஒருவரின் பழக்கமாக இருந்தாலும், அதனால் குடும்பமே பாதிக்கப்படுகிறது. இரண்டாம் நிலை புகையின் காரணமாக குழந்தைகள் உடல்நலக் குறைபாடுகள் அடைவார்கள். மனைவி மற்றும் பெற்றோர் மனஅச்சத்தில் வாழ நேரிடுகிறது. மருத்துவ செலவுகள் அதிகரிக்கின்றன. பாசம் குறைகிறது. உறவுகள் சீரழிகிறது. புகை வீட்டிலே நிம்மதியை பறிக்கின்ற ஒரு எதிர்மறை சக்தியாகிறது.

**சமூகப் பாதிப்புகள்** : புகை என்பது தனிப்பட்ட பழக்கம் மட்டும் அல்ல, இது சமூக நோயாக மாறுகிறது. பொதுஇடங்களில் புகைபிடிப்பது மற்றவர்களின் சுகாதாரத்தையும் பாதிக்கிறது. இளம் தலைமுறை இதை பேஷன் என பின்பற்றுகிறது. தொழில் உற்பத்தி, வேலைநேரம் இழப்புக்கு உரியதாகிறது. மருத்துவச் செலவுகள் சமுதாயச் செலவுகளாக மாறுகின்றன. உலக சுகாதார அமைப்பின் (2021) படி, 10 லட்சம் பேர் இரண்டாம் நிலை புகையால் பாதிக்கப்படுகின்றனர். புகை சமுதாய நலனுக்கும் ஒழுக்கத்துக்கும் பெரிய தடையாக மாறுகிறது.

**பொருளாதாரப் பாதிப்புகள்** : புகைக்கு ஒருவர் ஆண்டுக்கு ரூ. 75,000 வரை செலவழிக்கிறார். இது குடும்ப நிதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அரசு வருடத்திற்கு ரூ. 1.8 லட்சம் கோடி செலவழிக்கிறது. புகை காரணமாக வேலை நேர இழப்பு, மருத்துவ செலவுகள் கூடுகின்றன. நாட்டின் உற்பத்தி மற்றும் வளர்ச்சிக்கு தடையாக மாறுகிறது. இந்தப் புகை வாழ்வாதாரத்தில் நிதி நெருக்கடியை உண்டாக்குகிறது. அதனால் இந்தப் போதையை விட்டுவாழும் புதுப்பழக்கத்தை உருவாக்க வேண்டும்.

**ஆன்மிகப் பாதிப்புகள்** : விவிலியத்தில் உங்கள் உடல் தூயஆவியின் ஆலயம் என குறிப்பிடப்படுகிறது. புகை இந்த ஆலயத்தை மாசுபடுத்தும் பாவமாக செயல்படுகிறது. அறநெறி சிதைந்து, ஆன்மிக ஒழுக்கம் மங்குகிறது. புகை ஜெபத்தின் அமைதியை அழிக்கிறது. நம் உள்ளத்தை குழப்புகிறது. இறைவனோடு உள்ள உறவுத் தூய்மை சிதைகிறது. பாவ உணர்வு மங்குகிறது. ஆன்மா வாடுகிறது புகையை விலக்கினாலே ஆன்மீக வாழ்வு பிரகாசிக்கும்.

**மூளையில் ஏற்படும் ரசாயன மாற்றம்** : நிக்கோட்டின் மூளையின் வெகுமதி அமைப்பை (reward system) தவறாக தூண்டுகிறது. டோப்பமின் எனும் ரசாயனத்தை சிதைக்கிறது. பொய்யான மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதனால் ஒரு அடிமைத்தன்மை உருவாகிறது. நினைவாற்றல், சிந்தனையாற்றல், செறிவான கவனம் போன்ற மூளையின் இயல்பான செயல்முறையை இழக்கிறது. மனநிலை தடுமாற்றம், கவலை, சோர்வு நீங்க புகையை விலக்க வேண்டும்.

**பாதிக்கப்பட்டவர்களின் உண்மை கதைகள்** :

ரமேஷ் 45 வயது தொழிலாளி, 20 ஆண்டுகள் சிகரெட் பழக்கத்தால் நுரையீரல் புற்றுநோய்

அனிதா 24, மாணவி ஹுக்கா பழக்கத்தால் மார்புப் புற்றுநோய்

விஜயகுமார் ஓய்வுபெற்ற ஆசிரியர், பீடி பழக்கத்தால் வாய்ப் புற்றுநோய்

இவர்கள் யாவரும் நம்முடன் வாழும் நபர்கள். இவர்கள் வாழ்க்கை நமக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும். இவர்களால் நாம் விழிப்புணர்வைப் பெற வேண்டும்.

**புகையை விடுவதற்கான வழிமுறைகள்** : முதலில் மனஉறுதி முக்கியம். எனக்கு இது தேவையற்றது என்பதை உணர வேண்டும். துடிப்பான திட்டம், மருத்துவர் ஆலோசனை, நிக்கோட்டின் மாற்று சிகிச்சை தேவை. நடை, யோகா, தியானம் மனஅழுத்தத்தை குறைக்கும். நண்பர்கள், குடும்ப ஆதரவு வெற்றிக்குத் தேவை. முன்னேற்றத்தை பதிவு செய்வது ஊக்கத்தை அளிக்கும். ஒவ்வொரு நாளும் வெற்றி நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் விடுதல் சாத்தியமாகும்.

**புகையிலிருந்து விடுபட்டவர்களின் வாக்குமூலங்கள்** : "நான் சுவாசிக்கிறேன்" என்ற உணர்வு புதிதாக இருக்கிறது. விஜய் "புகையை விட்ட பிறகு என் மகளின் சிரிப்பை மீண்டும் கண்டேன்." ரேவதி "வாழ்க்கையை காதலிக்க நானே புகையை வெறுக்கத் தொடங்கினேன்." அரவிந்த் இவர்கள் வெற்றி பெற்றவர்கள் போராடி விடுபட்டவர்கள் உண்மை அனுபவங்கள் நீங்களும் இவர்கள் போல முடிவெடுக்கலாம். இதுவே உங்கள் கதையை மாற்றும் நிமிடம் ஆகட்டும். மாற்றம் எப்படிச் சாத்தியமாகிறது? மாற்றும் சிந்தனையில்

துவங்கி செயல்பாட்டில் முடிகிறது. "நான் மாறவேண்டும்" என்ற உணர்வு வரவேண்டும். அந்த உணர்வை வழிகாட்டுதலுடன் செயல்படுத்த வேண்டும். மருத்துவர், ஆன்மீக வழிகாட்டி, குடும்ப ஆதரவு, திட்டமிட்ட முயற்சி, வெற்றிக்கு வழிகாட்டும் முன்னேற்றங்கள் சிறியதாக இருந்தாலும் மாற்றம் சாத்தியம் இன்று முதல் துவங்குங்கள்.

**புகைப்பவரின் குடும்பத்தினரின் பங்கு** : புகைப்பவரை குற்றம் சாட்டாமல் அன்புடன் அணுக வேண்டும். அவரது முயற்சியை ஊக்கப்படுத்த வேண்டும். சிறிய முன்னேற்றங்களுக்கே பாராட்டு கூற வேண்டும். ஆதரவுடன் இருக்க வேண்டும். அன்பும் நம்பிக்கையும் வேண்டும். வெற்றிக்கு குடும்பம் பின்புலமாக இருக்கும் துடிப்பான உறவுகள் மாற்றத்திற்கு தூண்டுதலாக அமையும்.

**அரசாங்கத்தின் மற்றும் சமூகத்தின் பங்கு** : அரசாங்கம் புகை விளம்பரங்களைத் தடைசெய்ய வேண்டும். அரசுத்திட்டங்கள் வழியே புகை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் புகை எதிர்ப்பு கல்வி கொண்டு வர வேண்டும், சமூக அமைப்புகள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஊடகங்கள் பொறுப்புடன் புகை எதிர்ப்பு செய்திகளை வெளியிட வேண்டும். சமூக ஒத்துழைப்பு மாற்றத்தை வலுப்படுத்தும் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

**புகைக்கு மாற்றான புதிய முனைப்புகள்** : மூச்சுப் பயிற்சி, யோகா, நடை, இசை ஆகியவை உதவும் புதிய ஆர்வங்களை வளர்த்தெடுக்க வேண்டும். படிப்பு, வாசிப்பு, சமூக சேவை, உடலையும் மனதையும் சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவும். புதிய சூழலில் புதிய சிந்தனைகள் பிறக்கும். மனதைத் திசைதிருப்ப புதிய பழக்கங்கள் உதவும். வாழ்க்கையை மீண்டும் அழகாக்க இது ஓர் அருமையான வாய்ப்பு.

**எந்தப் புகையும் "எனக்கு வேண்டாம்" உறுதிமொழி** : "நான் இனி எந்தப் புகைக்கும் இடமளிக்க மாட்டேன்" இது எனது உறுதிமொழி மாணவர், பெற்றோர், சமூகத் தலைவர் ஒவ்வொரு நபரும் தங்கள் வாழ்வில் இது தேவையில்லையென உறுதி செய்ய வேண்டும். பள்ளிகளில், வேலை இடங்களில், புகை விழிப்புணர்வும் உறுதிமொழியும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இது வெறும் வார்த்தைகள் அல்ல. ஒரு தீர்மானம் உறுதிகொள்ளும் நபர் பலரை காப்பாற்ற முடியும். இது மாற்றத்தின் முதல்படி ஆகட்டும்.




**முடிவுரை** : புகையை விலக்கி புதிய வாழ்க்கையைத் தொடங்குங்கள். வாழ்க்கை என்பது நம் கைகளில் அமைந்துள்ள விலைமதிப்பற்ற ஒரு கொடை அந்தக் கொடையை, புகையால் சாம்பலாக்கி விடக்கூடாது. நம் ஒவ்வொரு மூச்சும் தம்முடைய உடலுக்கும், நம் குடும்பத்திற்கும் ஒரு சிறப்பு வரமாக இருக்கின்றது. இன்று எடுக்கும் நம் முடிவே நாளைய நம் வாழ்க்கையை மாற்றும் சக்தியாக அமையும். "நான் புகை பிடிக்க மாட்டேன்" என்ற உறுதியுடன் நாம் பேசுவோம். அந்த ஒரு முடிவே நமது வருங்கால வாழ்வை நேர்த்தியான வாழ்வாக நிச்சயம் மாற்றும் என்பதில் சந்தேகமேயில்லை. புகையில்லா ஒளிமயமான ஒரு எதிர்கால வாழ்க்கை நமக்காக வழிமேல் விழிவைத்து ஆவலாய் காத்திருக்கிறது.



# நீதி நிலைக்கட்டும்

அருள்பணி M.C. ராஜன்

நாம் வாழும் இந்த உலகம் பல்வேறு நாடுகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 800 கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்டு இந்த பூமி பந்து சுழன்று கொண்டிருக்கிறது. எல்லா மனிதர்களும் மகிழ்வோடும் உறவோடும் அமைதியோடும் வாழ்வதற்காக தணியாத வேட்கை கொண்டுள்ளனர். ஆனால் மானுட வரலாற்றை புரட்டிப் பார்க்கிறபொழுது, அதன் வரலாற்றின் பெரும்பாலான பக்கங்கள் மனிதர்களின் பச்சைரத்தத்தால் நனைக்கப்பட்டிருப்பது நன்றாகத் தெரியும். போர் இல்லாத, ஆயுதங்கள் இல்லாத ஒரு உலகில் தான் மனிதர்கள் உறவோடும் அமைதியோடும் வாழமுடியும்.

அதற்கு அடிப்படை தேவை நீதி என்கிற பண்பாகும். நீதி இல்லாத சமூகத்தில் அமைதி இருக்கமுடியாது. நீதியும் அமைதியும் இல்லாத சமூகத்தில் வளர்ச்சி இருக்கமுடியாது. வளர்ச்சி இல்லாதசமூகம் அடிமைகள் நிரம்பிய பிரதேசமாக மட்டுமே இருக்கமுடியும். எனவே இரண்டாம் உலகப் போர் முடிந்தபிறகு கூடி வந்த பல்வேறு நாட்டுத் தலைவர்கள், ‘‘இனிமேல் போர் வேண்டாம், சமாதான புறாக்கள் பறக்கட்டும்’’ என்று உருவாக்கியது தான் ஐக்கிய நாடுகள் அவை. 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் தேதி இது நடைமுறைக்கு வந்தது.

இதன் நோக்கங்களாக சர்வதேச அமைதி, சர்வதேச பாதுகாப்பு, சர்வதேச உறவுகளை மேம்படுத்துதல், சர்வதேச கூட்டுறவு, நாடுகளின் ஒருங்கிணைப்பு, மனித உரிமைகளை பாதுகாத்தல் போன்றவை ஆகும். அதன் அடிப்படையில் கடந்த 80 ஆண்டுகளில் மனிதகுலத்தை வளர்ச்சிக்காக நகர்த்தும் பல்வேறு மனித உரிமை உடன்படிக்கைகளை உருவாக்கி இருக்கிறது. இவற்றில் புகழ் பெற்றவை 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் நாள் உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமை உடன்படிக்கையாகும். காலம் செல்லச் செல்ல பலநாடுகள், அவற்றின் தலைவர்கள் தங்கள் மக்களுக்கு எதிராகவும், பிற நாடுகளுக்கு எதிராகவும் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்டு மனிதத்தை, மனிதநேயத்தை படுகொலை செய்துவிட்டு தப்பித்து விடுகிறார்கள்.

குறிப்பாக தங்கள் நாடுகளுக்குள் இருக்கிற சிறுபான்மை சமூகத்தவர், ஏழைகள், கொடுங்கோன்மை அரசுக்கு எதிரானவர்கள் என எல்லோரையும் எவ்விதமான ஈவு இரக்கம் இன்றிகொன்றுகுவிப்பது இவர்களுக்கு வாடிக்கை. எனவே 1998 ஜூலை 17ஆம் நாள் இத்தாலி நாட்டின் ரோமையில் ஒன்று கூடிய 120 நாடுகளின் ராஜதந்திரிகள் கலந்துகொண்ட மாபெரும் மாநாடு, சர்வதேச நீதியை மேம்படுத்துவதற்கான ஒரு சட்டவரைவை உருவாக்கியது. அந்தச் சட்டவரைவின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. எனவேதான் ஜூலை 17 சர்வதேச நீதிக்கான உலக நாளாக கொண்டாடப்படுகிறது. இது சர்வதேச நீதிதினம் என்றும் சர்வதேச குற்றங்களுக்கான நீதிதினம் என்றும் பல்வேறு பெயர்களில் கொண்டாடப்படுகிறது. 120 நாடுகள் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட இந்த சட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றம் பல்வேறு சாதனைகளை செய்திருக்கிறது என்றால் மிகை அல்ல.

இந்த நீதிமன்றத்தில் வரும் வழக்கிற்கான மிக முக்கியமான காரணங்களாக நாம் குறிப்பிட வேண்டும் என்றால்,

1. மனித இனப்படுகொலை நிகழ்த்திய தனிநபர்கள் மீதான விசாரணை
2. மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்
3. போர் குற்றங்கள்
4. ஆக்கிரமிப்பு குற்றங்கள்

2002 ஆம் ஆண்டு ஜுலை 1 முதல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தனது பணியை தொடங்கியது. மிக மோசமான மனித படுகொலைகளை நிகழ்த்திய பல்வேறு நபர்கள் இதன் மூலம் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். உலகம் முழுவதும் நீதிக்காக போராடுகிறவர்கள், போருக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள், உரிமை பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான உரிமைகள், அமைதி பாதுகாப்பு மற்றும் உலக நலனுக்கு எதிராக செயல்படுபவர்கள், இவர்களின் குற்றங்களை தடுக்க நினைப்பவர்கள் ஒன்று சேரும் நாளாக 2010 ஆம் ஆண்டுமுதல் சர்வதேச நீதிக்கான தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், உலகத்திற்கு மனித உரிமைபாடம் நடத்துகின்ற மிகப்பெரிய ஜனநாயக நாடுகள் என்று மார்தட்டி கொள்கின்ற அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை. எனவே இந்த நாடுகளில் இருப்பவர்களை அவர்களுடைய குற்ற செயல்களுக்காக தண்டிப்பது என்பது இயலாத காரியம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணை வரம்புக்குள் இவர்கள் வரமாட்டார்கள்.மேலும் சிறிய நாடுகளான இஸ்ரேல், இந்தோனேசியா, ஈராக், சவுதி அரேபியா போன்ற நாடுகளும் இவற்றில் கையெழுத்திடவில்லை.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணை வரம்பு எல்லையை பார்க்கும் பொழுது, ஒன்று எந்தநாடுகள் கையெழுத்திட்டு இந்த உடன்படிக்கையில் தங்களை இணைத்துக் கொண்டனவோ அந்த நாடுகளின் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமுடியும் அல்லது ஐக்கியநாடுகள் அவையின் பாதுகாப்பு சபை கூடி பரிந்துரைக்கும் ஒரு வழக்கையும் இந்த நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு விசாரிக்கும். இதில் தண்டிக்கப்பட்டவர்கள் என்பதை பட்டியலை பார்க்கிற பொழுது சூடான அதிபர், காங்கோ நாட்டு பிரதமர், ரஷ்யாவின் உடைய புட்டின் போன்றவர்கள் இதனால் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். தற்போது மாபெரும் மனிதப்படுதலை நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற இஸ்ரேல் நாட்டின் உடைய பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, மேலும் பல இஸ்ரேலிய தலைவர்கள் இந்த நீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நீதிமன்றத்தின் தேவை ஏன் என்று பார்க்கிறபொழுது போர்கள், மனித படுகொலைகள், உலக அமைதியை குலைக்கின்றன. மனிதர்கள் நாடுகளின் பாதுகாப்பை அச்சுறுத்துகின்றன. பசி பட்டினியை உருவாக்குகின்றன. உலகம் முழுவதும் மரணஓலங்கள் கேட்கச் செய்கிறது. லட்சக்கணக்கான அகதிகளை உருவாக்குகிறது. மானுடம் கொஞ்சம் கொஞ்சமாக செத்துப் போகிறது. உலக மக்களில் பெரும்பாலான பேர் அமைதியான வாழ்வை விரும்புகிறவர்கள் தான். போர் இல்லாமல் இரத்தம் சிந்தாமல் வாழவேண்டும் என்று ஆசைப்படுகிற மனிதர்களின் எண்ணிக்கைதான் பூமியில் அதிகம். ஆனால் உலகை ஆளுகின்ற தலைவர்கள், ஆயுத வியாபாரிகளின் கைப்பிடிக்குள் இருப்பதால் இந்தமக்கள் மீதும் போர்கள் வலிந்து திணிக்கப்படுகின்றன. அவற்றை எதிர்ப்பவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் அல்லது கொலை செய்யப்படுகின்றனர். எனவே உலகம் முழுவதிலும் இருக்கின்ற அமைதியை விரும்பும் மனிதர்கள், இயக்கங்கள், அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி வந்து சர்வதேச நீதி தினத்தை கொண்டாடி, அதனுடைய முக்கிய கருத்துக்களை எல்லா மக்களுக்கும் எடுத்துச் சென்று, போர் இல்லாத, வன்முறை இல்லாத அமைதி நிறைந்த ஒரு உலகை உருவாக்க உழைப்பதே நமது பிறப்பின் நோக்கமாக இருக்கமுடியும்.



# புனித தேவசாகயம் பற்றி முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்...

**ஓலைக்கோடு ஜாண்**

**தமிழ் மண் ஈன்ற முதல் புனிதர் தேவசகாயம் அவர்களைப் பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் .....**

இறைமடியில் துயில் கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் தமிழ் மண் ஈன்ற முதல் புனிதர், புனித தேவசகாயம் பற்றிய அறிக்கை ஒன்றை இப்பூவுலகிற்கு வழங்கியிருந்தார். இலத்தீன் மொழியில் வெளியான அந்த புனிதர் நிலை அறிவிப்பாணையை தமிழில் மொழியாக்கம் செய்தவர் அருள் முனைவர் **எ. ஜாண் குழந்தை** அவர்கள்.

தொகுப்பு : **ஓலைக்கோடு ஜாண்**

பிரான்சிஸ், ஆயர், கடவுளின் ஊழியர்க்கு ஊழியருமாகிய பிரான்சிஸ், என்றும் நினைவில் நிற்க அறிவிக்கை செய்வது:

“என் நண்பர்களாகிய உங்களுக்கு நான் சொல்கிறேன். உடலைக் கொல்வதையன்றி வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்சவேண்டாம்” (லூக்கா 12:4), ஆண்டவரின் இந்த வார்த்தைகளை ஆழமாக அனுபவித்தறிந்தவர் முத்திப்பேறு பெற்ற தேவசகாயம். தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் முன் அவர் தம் நம்பிக்கையில் ஒருபோதும் தடுமாற்றத்திற்கு ஆளாகவில்லை.

1712 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள், தென்மேற்கு இந்தியாவில் திருவிதாங்கூர் அரசின் நட்டாலம் என்னும் ஊரில் புகழ்பெற்ற இந்துக்குடும்பம் ஒன்றில் பிறந்தார். நீலம் என்றும் நீலகண்டன் என்றும் அழைக்கப்பட்டார். முறையான கல்வியும், உயர்தரமான பண்பாட்டுப் பயிற்சியும் தனிப்பட்ட முறையில் பெற்றார். அவரது குலத்தைச் சேர்ந்த ஆடவர் மன்னரின் படையில் சேர்ந்து போரிட்டு வந்தனர். இளைஞரான நீலகண்டன் இதோடு தற்காப்புக் கலைகளிலும் கல்வியிலும் சிறப்புற்று விளங்கியதோடு, அவற்றைப் பிறர்க்குக் கற்றுத் தருபவராயும் இருந்தார். மன்னரின் படையில் சேர்ந்து, தம் ஆளுமையின் சிறப்பாலும், தமது செயல் திறமையினாலும் அரச அலுவலில் ஓர் உயர்ந்தநிலையை அடைந்து, அரசப் படைகளின் கருவூலங்களின் நிர்வாகியாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்துமதத்தின் தொன்மையான மரபுகளை ஆர்வத்துடன் கற்றுக்கொள்பவராக நீலகண்டன், தெய்வங்கள் மற்றும் தம் மதம் சார்ந்த பக்தியில் தவறாமல் வழிபட்டு வந்தார்.

1741ஆம் ஆண்டு, டச்சுப்படையானது, மலபார் பகுதியில் திருவிதாங்கூர் அரசின் ஒரு பகுதியை ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டு அதற்காகத் தாக்குதலில் ஈடுபட்டது. போர் மூண்டது. டச்சுப்படைகள் சிதறடிக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டன. பல டச்சுப்படைவீரர்கள் கைது செய்யப்பட்டனர். படைத்தளபதியானக் கத்தோலிக்கர் யுஸ்தாகியுஸ் டிலனாய் அவர்களுள் ஒருவராக இருந்தார். அவர் தம்

அரசின் மேம்பாட்டுக்காக உழைக்க ஆர்வம் கொண்டவராய் இருந்தார்.

டச்சுப்படையின் தளபதியான டிலனாய் படைவீரர்கள் விடயத்தில் திறமைமிக்கவராய் இருப்பதை அறிந்த திருவிதாங்கூர் மன்னர், அவரைச் சேர்த்துக்கொண்டு, தமதுபடையின் தளபதியாக நியமித்தார்.

முத்திப் பேறுபெற்ற நீலகண்டன் இந்த மனிதர் டிலனாயுடன் மிகவும் நெருங்கிப் பழகலானார். நாளடைவில் நமது அருளாளர் கிறிஸ்தவ மதத்தினால் ஈர்க்கப்பட்டார். கிறிஸ்துவைப் பின்பற்றவும், ஒரு கிறிஸ்தவராக ஆகிடவும் ஆசை கொண்டு தம் ஆசையை வெளிப்படுத்தினார். மன்னர் மார்த்தாண்டவர்மா கிறிஸ்தவ நம்பிக்கைக்கு மக்கள் மாறுவதைக் குறிப்பாக,உயர்நிலை சமூகங்களில் இருந்தவர்கள் அப்படி மாறுவதை வெறுத்து வந்தார். நற்செய்தி மார்க்கத்தில் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளைத் தமக்குள் உணர்ந்த டிலனாய் கிறிஸ்தவ நம்பிக்கையைத் தழுவிட தன் நண்பர் கொண்டிருந்த வேகத்தினைப் பார்த்துத் தயங்கினார். எனினும், தம் வழிகாட்டுதலையே சார்ந்திருந்த அவரை நீலகண்டனை டிலனாய், அரசரின் கோபத்தைத் தவிர்க்கும் நோக்குடன், திருவிதாங்கூர் அரசின் எல்லைக்கு வெளியே சேசுசபை நற்செய்திப் பணியாளராக இருந்த தந்தை யோவான்னெஸ் பாப்டிஸ்ட் புத்தாரிடம் அனுப்பினார். அவர் அவருக்கு 1745 ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் திருமுழுக்கு வழங்கி, தேவசகாயம் என்னும் பெயரை அவருக்குத் தந்தார். இப்பெயர் விவிலியத்தில் வரும் இலாசரஸ் என்னும் பெயரின் தமிழாக்கம் ஆகும்.

திருமுழுக்குக்குப் பின் நம் அருளாளர் இயேசு கிறிஸ்துவின்மீது நம்பிக்கையைப் பரப்பிட, பெரியதோர் நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தொடங்கினார். அவரின் மனைவி பார்கவியம்மாவும் திருமுழுக்கின் அருள் அடையாளத்தைப் பெற்றுக்கொண்டு தெரேசா என்னும் பொருள்படும் ஞானப்பூ என்னும் பெயர் சூட்டப் பெற்றார்.

தேவசகாயத்தின் மதமாற்றம் நாட்டுத் துரோகம் எனவும், அரசிற்கு ஆபத்தானது எனவும் கருதப்பட்டு வந்தது. பிராமணர்கள் தங்களால் புனையப் பெற்ற குற்றச் சாட்டுக்களைக் கொண்டு மன்னரிடம் அவரைப் பற்றி முறையீடு செய்தனர். அரசு முதன்மையாகக் கருதிய இந்துக்களின் தெய்வங்களை வணங்க மறுத்ததும் திருவிழாக்களில் பங்கெடுக்க மறுத்ததும் முதன்மைக் குற்றச்சாட்டு ஆகும். இது அதிகாரிகளுக்கு எரிச்சல் ஊட்டும் அளவுக்கு இருந்தது. மக்களிடையே நிலவிய ஏற்றத் தாழ்வுகள் வெல்லப்பட்டு, தாழ்த்தப் பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு நல்லுறவைப் போதித்தார். இதை எல்லாம் அவர்களால் கொஞ்சமும் சகித்துக்கொள்ள இயலவில்லை. இறுதியாக, ஒரு புதிய ஆலயம் கட்டுவதற்கு மரங்கள் வழங்கியதன் மூலம் கிறிஸ்தவர்களுக்கு, குறிப்பாக தந்தை புட்டாரிக்கு உதவி செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார்.

அரண்மனை அதிகாரிகளின் வற்புறுத்தலினால் முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் கைதுசெய்யப்பட அரசர் ஆணையிட, 1749 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 அன்று சிறையில் அடைக்கப்பட்டார். தமது புதிய நம்பிக்கையைக் கைவிடவும் இந்து சமயத்தவர் முறைமைகளைப் பின்பற்றவும் மன்னர் அவரைக் கோரினார். இல்லாவிட்டால் தண்டிக்கப்படுவார் என்றும் தெரிவித்தார். மன்னனும் தலைவர்களும் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்று, முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் தமது புதிய நம்பிக்கையை உறுதியாகப் பற்றிக்கொண்டார். ‘‘நான் கிறிஸ்துவை மறுதலிக்கமாட்டேன்’’ என்றார்.

அவர் தம் கிறிஸ்தவ நம்பிக்கையைக் கைவிடசெய்ய அவர்கள் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியுற, அவரை எல்லார் முன்னும் தொடர்ந்து துன்புறுத்த ஆணையிட்டார் அரசர். அதன் நோக்கம் என்னவென்றால், கத்தோலிக்க நம்பிக்கைக்கு மாற எண்ணம் கொண்டவர்களுக்கு அது ஓர் எச்சரிக்கையாக இருக்கத்தான். தேவசகாயத்தின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி கிறிஸ்தவர் பலரும் தங்கள் முடிவில் உறுதியாய் இருந்தார்கள். ஏனைய கிறிஸ்தவர்கள் பலர் அந்த அரசை விட்டுவெளியேறினர். தம் நம்பிக்கையை விட்டு விலகிய சிலரும் உண்டு. அரசு அமைச்சர் களும் படைவீரர்களும் அவரை வதைசெய்ய மேலும் பலகொடிய முறைகளை வடிவமைத்தனர். இவ்வாறு அந்தச் சித்திரவதை, தொடர்ந்து கம்புகளைக் கொண்டும் முட்களாலும் நடந்தது. அடிகளால் உடல் வேதனைகளும் அதிகரித்தன. காயங்களில் வற்றல் பொடியைப் பூசினார்கள். தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் மத்தியில் நிற்க வற்புறுத்தினர். பலகாததூரம் கொளுத்தும் வெயிலில் அவரை நடக்க வைத்தனர். கைகளையும் கால்களையும் சங்கிலிகளால் பிணைத்து வைத்தனர். புலியூர்க்குறிச்சியில் ஒரு பாறையின்மீது இருந்தபோது அவருக்குத் தாகமாய் இருந்தது. ஆனால் ஒருதுளி தண்ணீர் கூட குடிக்க அவருக்கு அனுமதி மறுத்துவிட்டனர். எனவே அவர் பாறையின்மீது மண்டியிட்டு இறைவேண்டல் செய்தார். அந்தப் பாறையிலிருந்து தண்ணீர் பீறிட்டது. அந்தத் தண்ணீரால் அவரது தாகத்தைத் தணிக்க முடிந்தது. அதிகாரிகள் அவரது உடல் வதைகளை மேலும் அதிகரித்தனர். அவரைப் பெருவிளைஎன்ற இடத்திற்கு அழைத்துச் சென்று வதைப்போரிடம் கையளித்தனர். அவர்கள் அவரை மரத்தைப் பார்த்த வண்ணம், திரும்பவோ படுக்கவோ இயலா வண்ணம் கட்டிவைத்தனர். திறந்தவெளியில் கொளுத்தும் வெயிலிலும், மழையிலும், காட்டிலும் ஏழு மாதங்கள் பசியால் துன்புற்றார்.

தமது துன்பங்கள் அனைத்தையும் மகிழ்ச்சியான இதயத்துடன் கடவுளின் மாட்சிக்காக ஒப்புக்கொடுத்தார். இயேசுவின்மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையில் ஒருபோதும் தடுமாறியதில்லை. அவருடைய ஆசீயையும் இறைவேண்டுதலையும் நாடி தினமும் மக்கள் கூட்டம் அவரிடம் வந்து கொண்டிருந்தது. படைவீரர் அவரிடம் இரக்கம் காட்டத் தொடங்கினர். எவ்வாறு என்றால், சங்கிலிகளிலிருந்து தப்பியோடி விடத் தூண்டினார்கள்.

அரசனும் அரசு அதிகாரிகளும் இந்த விபரங்களை அறிந்தனர். எனவே, ஏராளம் மக்கள் கிறிஸ்தவச் சபைக்கு மாறுவதைத் தடுக்கும் நோக்குடன், தேவசகாயத்தை அரசின் கிழக்கு எல்லையில் இருந்த ஓர் இரகசிய அறையில் அடைத்திட உத்தரவிட்டனர். அங்கும் சித்திரவதைகள் மேலும் மேலும் நடந்து கொண்டிருந்ததால் அவருடைய உடல்நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வந்தது.

இறுதியாக, அவர் ஆவலோடு காத்திருந்த மறைச்சாட்சிக்குரிய இறுதித் துன்பத்தின் நாளும் வந்து சேர்ந்தது. 1752ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் நாள் அவரை அமைதியாகக் கொன்று விடுமாறு மன்னரால் ஆணையிடப்பட்டது. அன்று நள்ளிரவுக்கு முன் முத்திப்பேறு பெற்ற (அருளாளர்) தேவசகாயம் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டார். அவரால் நடந்து செல்ல இயலவில்லை. எனவே அவர்கள் தாங்களே தூக்கிக்கொண்டு, ஆரல்வாய்மொழி காட்டில் உள்ள ஒரு மலை மேட்டுக்குக் கொண்டு சென்றனர். ஆண்டவருக்குத் தம்மைக் கையளித்து கடைசியாக உன்னத கடவுளிடம் மண்டியிட்டு வேண்டுதல் செய்திட உத்தரவு

வேண்டினார். இறுதியாக கட்டளையை நிறைவேற்றுமாறு அவர் வீரர்களைக் கேட்டுக் கொண்டார். பல முறை சுடப்பட்டார். அப்பொழுது “இயேசுவே என்னை இரட்சியும்” என்று கூக்குரல் எழுப்பியவாறு கீழே சாய்ந்தார்.

ஐந்து நாட்களுக்குப்பின், அருகில் வசித்த கிறிஸ்தவர்கள் அவர் கொல்லப்பட்டதை அறிந்ததும், அவரது உடலின் எஞ்சிய பாகங்களைச் சேகரித்துக்கொண்டு, கோட்டாறு நகரில் உள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் அடக்கம் செய்தனர். அவரது மறைச்சாட்சியத்தின் புகழ் தொடர்ந்து இந்தியாவில் ஏராளமாகப் பரவியது. அவரது முத்திப்பேறு நிலை அறிவிப்புக்கான திருப்பணி தொடங்கப்பட்டது.

அவரது மறைசாட்சியம் சார்ந்த மறைமாவட்ட ஆய்வானது 2006 ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை கோட்டாறு மறைமாவட்ட நிர்வாகச் செயலகத்தில் நடந்தேறியது. வரலாற்று ஆலோசகர்கள் 2011ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் நாள் தங்களின் சாதகமான முடிவினைத் தந்தனர். தொடர்ந்து 2012 ஆம் ஆண்டு பிப்ரவரிமுதல் நாளில் நடந்த ஒரு சிறப்புப் பொதுக்குழுவில் இறையியல் ஆலோசகர்கள், சேகரிக்கப் பட்டிருந்த வரலாற்று ஆவணங்களின் மூலம், கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிரான வெறுப்பால் வன்கொடுமைக்காரர்களால் அவர் துன்புறுத்தப் பட்டது, மற்றும் இறைஊழியர் அதனை ஏற்றுக்கொண்டது ஆகிய இரண்டு விஷயங்களையுமே ஏற்றுக்கொண்டனர். பின் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் தேதி நடந்த கர்தினால்கள் ஆயர்களின் பொதுக் குழுவில் அவரது சாவானது ஓர் உண்மையான மறைசாட்சியமே என்னும் முடிவுக்கு வந்தனர். 2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் நாளில் எனது முன்னோடியான 16ஆம் பெனடிக்கட் அவர்கள் மறைசாட்சிய அறிவிப்பின் ஆணையை அறிவிக்கப் பணித்தார். அதன்படி அதே ஆண்டில் டிசம்பர் மாதம் 2ஆம் தேதி, கோட்டாறு மறைமாவட்டத்தில், நாகர்கோவில் நகரில், திரளான நம்பிக்கையாளர்கள் கலந்துகொள்ள, முத்திப்பேறு அறிவிப்புத் திருச்சடங்கு நிறைவேற்றப்பட்டது.

புனிதர் பட்டம் வழங்குவது தொடர்பாக, அருளாளரின் பரிந்துரையால் நடந்ததாக முன்வைக்கப்பட்ட ஓர் அதிசயநலம் பெறுதல் நிகழ்வு குறித்து கோட்டாறு மறைமாவட்டத்தில் மறைமாவட்ட ஆய்வு நடத்தப்பட்டது. ஒரு பெண்மணியின் 24 வாரம் நிறைவுற்ற கருவானது மீண்டும் உயிர்பெறச் செய்தநிகழ்வே அது. 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் நாள் புனிதர்களின் திருப்பணிக்கான பேராயத்தின் மருத்துவக் குழுவினர், அந்த நலம் பெற்ற நிகழ்வானது அறிவியலின் விளக்கத்திற்கு உட்பட்டதல்ல என்று ஒருமித்த கருத்துடன் முடிவுக்கு வந்தனர். 2019ஆம் ஆண்டு டிசம்பர் 5-ம் நாள் இறையியலாளர்களாகிய ஆலோசனைக் குழுவினர் ஒருசிறப்புப் பொதுக்குழுவில் கூடி, நடைபெற்றுள்ள நலம் பெறுதலானது அருளாளரின் பரிந்துரையால்தான் நடைபெற்றது என்று தெளிவுப்படுத்தினர். மேலும் 2020ஆம் ஆண்டு பிபப்ரவரி 18ஆம் நாள் கர்தினால் தந்தையர்கள் ஆயர்களின் சாதாரண பொது அமர்வில் கூடி நடந்தேறிய நலம் பெறுதலானது ஒரு அதிசய நிகழ்வு என்று ஒருசேரக் கூறினர். 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் நாள் அதிசயம் குறித்த ஆணையை வெளியிடுமாறு புனிதர்களின் பேராயத்திற்கு நாமே ஆணை வழங்கினோம். 2021 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் நாள் கர்தினால்களின் அமர்வில் அவரது புனிதர் பட்டம் வழங்குவது என்று முடிவு செய்தோம். பின்பு அந்தப் புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வை 2022ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் நாள் கொண்டாட வேண்டும்

என்று முடிவு செய்தோம்.


எனவே இன்று, உரோமை நகரின் பேதுரு சவுக்கத்தில் ஆடம்பரத் திருப்பலியின் போது இந்த அறிவிக்கையை நாங்கள் செய்தோம். அதாவது,

மூவொரு கடவுளின் தனிப்பட்ட மாட்சிக்காகவும், கத்தோலிக்க நம்பிக்கையின் உயர்ச்சிக்காகவும், கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சிக்காகவும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலும் ,முத்திப்பேறு பெற்ற திருத்தூதர்களான பேதுரு, பவுல் மற்றும் எமது அதிகாரத்தாலும், ஏற்கனவே செய்யப்பட்ட முதிர்ச்சியான ஆலோசனையின் மூலம் மேற்கொள்ளப்பட்டதும், அடிக்கடி இறை உதவிக்காக மன்றாடப்பட்டதும், நம் சகோதரர்கள் பலரின் அறிவுரைப்படியும், முத்திப்பேறு பெற்றவர்களான.

டைட்டஸ் பிராண்ட்மா (Neatos Titum Brandsma), தேவசகாயம் என்று அழைக்கப்படும் இலாசரஸ் (Lazarumdictum Devasahyam), சீசர் டிபஸ் (Caesam de Bus), அலாய்சியுஸ் மரியபலாத்சொலோ (Aloisium Mariam Palazzol), யுஸ்தினுஸ் மரியரூஸஸொவில்லோ (Justinum Mariam Russolitto), சார்லஸ் தெ ஃபோக்கோ (Carolum de foucauld), மரியாரிவியர் (Mariam Rivier), ஜெசு சாந்தோகனாலேயின் மரியாம் (Mariam a Jesu Santocanale) மற்றும் மரியாம் தோமினிக்காம் மாந்தொவானி (Mariam Dominicam Mantovani) ஆகியோர் புனிதர்கள் என அடையாளப்படுத்துகிறோம். வரையறுக்கிறோம், புனிதர்களின் பட்டியலிலே அவையிலும் புனிதர்களோடு பக்தியுடன் நினைவுகூரப்பட வேண்டும். தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே.

கிறிஸ்துவின் நம்பிக்கையாளரான இப்புகழ்மிகு பொதுநிலையினா் ஆற்றல் தம்மில் மிகச் சிறந்த ஆன்மீக வளர்ச்சியைக் காட்டினார். கிறிஸ்துவின் மீதும் அவருடைய திருஅவையின் மீதும் தாம் கொண்டிருந்த பாச உணர்வுக்குதம் இரத்தத்தை சிந்தும் அளவுக்குச் சான்றுரைத்ததோடு, தம் இறைப்பற்றினையும் அடையாளங்கள் வழி எண்பித்தார். நற்செய்தியின் வார்த்தைகளைக் கற்றறிந்து அவற்றைத் தம் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றி வந்தார். இந்த எழுத்தாவணம் வழியாக வரையறுத்துள்ளவை இக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் முழுமை பெற்றதாகவும் உறுதியானவைகளாகவும் இருக்கவேண்டுமென அழைக்கிறோம். இதற்கு மாறான எதுவும் செல்லாததாகும்.

எமது திருத்தந்தைக்குரிய பணியின் 10ஆம் ஆண்டில், இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் தேதி உரோம் நகரின் லாத்தரனில் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.





# எளிய வாழ்க்கையில் பெரிய மனிதர்கள்

**சேவியர்,** பரக்குன்று

அப்பா சின்ன வயதிலிருந்தே ஒரு விஷயத்தை எங்களிடம் சொல்லிக் கொண்டே இருப்பார். ‘‘எது இல்லாமல் ஒரு மனிதனால் வாழ முடியுமோ, அது இல்லாமல் வாழ வேண்டும். அதுவே சிறந்த வாழ்க்கை’’ என்பார். அதன் பின் அந்த போதனை எங்களுடைய வாழ்க்கையின் பாகமாகி விட்டது. ஒவ்வொரு ஆசை வரும்போதும், ‘‘இது இல்லாமல் வாழ முடியுமா?’’ எனும் கேள்வி எங்களுக்குள் எழுவது இயல்பாகிவிட்டது. எளிய வாழ்க்கை வாழவேண்டும் எனும் எண்ணம் எங்களுக்குள் ஆழமாய் வேரூன்ற அவரது அந்த அறிவுரையும், அதன் படி அவர் வாழ்ந்து காட்டியதுமே காரணம்.

எதையும் கிறிஸ்துவை மையப்படுத்தி சிந்திப்பதில் தான் கிறிஸ்தவ வாழ்க்கையின் அழகும் அர்த்தமும் இருக்கின்றன. எளிய வாழ்க்கை என்பதையும், யார் பெரிய மனிதர் என்பதையும் கூட கிறிஸ்துவை மையப்படுத்தி சிந்திப்பதே சரியானதாகும்.

உலகம் பெரிய மனிதர்கள் யார்? என்பதற்கு சில அளவுகோல்களை வைத்திருக்கிறது. புகழ், பெருமை, செல்வம், அந்தஸ்து, கல்வி என நிறைய விஷயங்களைப் பட்டியலிடுகிறது. ஆனால் கிறிஸ்தவம் பெரிய மனிதர்கள் என்பதை அவர்களுடைய குணாதிசயத்தை வைத்து அளவிடுகிறது. அவர்களுடைய இதயத்தின் சிந்தனையை வைத்து அளவிடுகிறது. அதனால் தான் இரண்டு காசு போட்ட ஏழை விதவை இயேசுவின் பார்வையில் பெரியவராய்த் தெரிந்தார்.

பெரிய மனிதர்கள் என சொல்லும்போது, இயேசுவை விடப் பெரிய மனிதர் என யாரையும் நாம் சுட்டிக் காட்ட முடியாது. இயேசுவின் வாழ்க்கை எப்படி இருந்தது? உலகப் பொருட்களின் மீதான அவரது பார்வை எப்படி இருந்தது?

நரிகளுக்கு வளைகள் உண்டு, ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகள் உண்டு. மனுமகனுக்கோ தலை சாய்க்கவும் இடம் இல்லை என்றார் இயேசு. அவர் பயணித்த இடங்களிலெல்லாம் அப்பார்ட்மெண்ட் அல்லது கெஸ்ட் ஹவுஸ் வாங்கி வைக்கவில்லை. மலைகளிலும், பாலை நிலங்களிலும், பயணிக்கும் படகிலும் எங்கே வேண்டுமானாலும் ஓய்வெடுக்க அவரது உடலும், மனமும் தயாராய் இருந்தன.

அவரது பிறப்பு எளிய குடியில், ஏழை மரியாளிடம், தொழிலாளியான யோசேப்பின் பாதுகாவலில் நிகழ்ந்தது. பிறப்பில் காட்டிய எளிமையை அவர் வாழ்க்கை முழுவதும் வெளிப்படுத்தினார். எளிமையான ஆடை உடுத்தினார், எல்லா இடங்களுக்கும் நடந்தே பயணித்தார். அல்லது பிறருடைய படகுகளில் பயணித்தார். எளியவர்களோடு உண்டார், எளிமையாய் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

ஆனால் அவரது செயல்கள் இந்த மண்ணில் காட்டிய மாற்றத்தை வேறெந்த உலக மகா செல்வந்தர்களாலும் நிகழ்த்த முடியவில்லை. அவர் கொண்டு வந்த மீட்பை வேறு எவருமே பெற்றுத் தரவும் முடியாது ! அவர் காட்டிய அதிசயங்களை வேறொவரும் நிகழ்த்தவும் முடியாது.

அவர் நிராகரிக்கப்பட்டவர்களோடு நடந்ததும், புறக்கணிக்கப் பட்டவரோடு பயணித்ததும் அவரது எளிமையினால் தான். அதே நேரத்தில் அதிகார வர்க்கத்தின் முன்னால் நிமிர்ந்து நிற்க முடிந்ததும் அவருடைய செல்வச் செருக்கினால் அல்ல, உண்மையினால், அன்பினால், இரக்கத்தினால்.

அத்தகைய எளிமையே நம்முடைய வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும். இயேசுவின் எளிமை அவரது இதயத்தில் வெளிப்பட்டது. அவர் செல்வராய் இருந்தாலும் நமக்காய் ஏழையானார் என்கிறது விவிலியம். தனக்கென எதையும் சேர்த்துக் கொள்ளாமல் பிறரன்புப் பணியே தன் இலக்கு என பயணித்தார்.

செல்வத்தை மண்ணில் சேமிக்காதீர்கள், இங்கே பூச்சியோ துருவோ அழித்துவிடும். திருடரும் கன்னமிட்டுத் திருடுவர். எனவே செல்வத்தை விண்ணில் சேமியுங்கள் என்றார் இயேசு. உலகில் செல்வத்தைச் சேமிக்க வேண்டும் எனும் தேடல் இருப்பவர்களுடைய நேரம் முழுதும் அந்த சிந்தனைகளிலேயே கரைந்து விடுகிறது. அது நம்மை உலக ஆசைகளின் மேல் சங்கிலிகளால் இறுக்கிக் கட்டுகிறது!

எளிமையான வாழ்க்கையோ அத்தகைய சங்கிலிகளை அறுத்து எறிகிறது. உலகின் மீதும் உலக செல்வத்தின் மீதும் அதீத ஆசை கொள்ளாமல் வாழ வைக்கிறது. குறைந்த பட்சம் என்ன தேவையோ அத்துடன் வாழ நம்மைப் பழக்குகிறது. அதிகம் சேமிப்பது நம் சிறகுகளைப் பளுவாக்கும், பறப்பதைத் தடுக்கும். விண்ணகம் நமக்கு எட்டாக்கனியாய் மாறிவிடும்.

மகாத்மா காந்தியடிகள் எளிமையை விரும்பி ஏற்றுக் கொண்டவர். ‘நாம் எளிமையாய் வாழ்ந்தால், இன்னொரு ஏழைக்கு ஒருவேளை உணவு கிடைக்கலாம்’ என்பார் காந்தியடிகள். அவர் ஆடையில் எளிமையைக் காட்டினார். தன்னை எளியவன் என அறிவிக்க அல்ல, எளியவர்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள.

சமகால மனிதர்களில் அன்னை தெரசாவைத் தவிர்த்து விட்டு எளிமையாய் வாழ்ந்தவர்களைப் பற்றிப் பேச முடியாது. அவர்களின் எளிமையே அவர்களை பணி செய்ய வைத்தது. அவர்களை ஈகோ இல்லாமல் மக்களைச் சந்திக்க வைத்தது. எல்லோரிலும் இறைவனைக் காண வைத்தது. அவரது எளிமையே அவரை மனிதநேயம் மிக்க மனிதராய் மிளிர உதவியது. அந்த எளிமைக்குக் காரணம் இயேசு அவரை அழைத்தது தான். ‘ஏழைகளில் பரம ஏழைகளுக்கு உதவு’ எனும் இயேசுவின் அழைப்பு தான்.

உண்மையான திருப்தி என்பது எது தெரியுமா? நாம் விரும்புவதெல்லாம் கிடைப்பதில் அல்ல! கிடைப்பதைக் கொண்டு மகிழ்வதில், கிடைத்தவற்றுக்காய் இறைவனுக்கு நன்றி கூறுவதில்! இறைப்பற்று எவருக்குக் கிடைக்கும் தெரியுமா? “இறைப்பற்று பெரும் ஆதாயம் தருவதுதான் ஆனால், மனநிறைவு உள்ளவர்களுக்கே தரும்.” அதை இந்த வசனமே தெளிவாக்குகிறது. மன நிறைவு எளிமையின் மிகப்பெரிய அடையாளம்.

ஆன்மிகப் பார்வை வலிமையடைய வேண்டுமெனில் நாம் எளிமையை அணிந்தாக வேண்டும். எளிமையான வாழ்க்கை தான் நமது சிந்தனையை ஒருமுகப்படுத்த உதவும். ஜெபம், தியானம், மனித நேயப் பணிகள் போன்றவற்றில் நம்மை ஈடுபடுத்த அலைபாயாத மனம் அவசியம். அதற்கு எளிமையான வாழ்க்கை அவசியம். எளிமையே புனிதமான ஒரு அமைதியை இதயத்தில் தரும்.

1700 களில் இங்கிலாந்தில் வாழ்ந்த, ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த ஜாண் வெஸ்லி வேலைக்குச் சென்ற போது அவருக்கு ஆண்டுக்கு 30 பவுண்ட்கள் சம்பளம் கிடைத்தது. அதில் 28 பவுண்ட்களை தனக்கென செலவு செய்தார். இரண்டு பவுண்ட்களை பிறருக்குக் கொடுத்தார். பின் அவருடைய சம்பளம் 40 பவுண்ட் ஆனது, அப்போதும் தனக்கென 28 பவுண்ட் வைத்துக்

கொண்டார், 12 பவுண்ட் பிறருக்குக் கொடுத்தார். அதன் பின் ஐம்பது, அறுபது, நூறு, நூற்று இருபது என சம்பளம் அதிகரித்தது. எனினும் தனக்கென வெறும் இருபத்தெட்டு பவுண்ட்களை வைத்திருந்தார், பகிர்தலை மட்டும் அதிகப்படுத்திக் கொண்டே இருந்தார். 'அதிகமாய்ப் பெறுவது, அதிகமாய்க் கொடுப்பதற்கே' என்றார் அவர். பெறுதல் இறைவனின் கருணை பகிர்தல் மனிதனின் கடமை! எளிமையாய் வாழ்ந்தால் மட்டுமே இத்தகைய மனித நேயப் பணிகளில் நம்மை ஈடுபடுத்த முடியும்.

எளிய மனத்தோரே பேறுபெற்றவராய் இருக்க முடியும். எளிய மனத்தோரே தாழ்மையை அணிய முடியும். எளிய மனத்தோரே இறைவனின் பிள்ளைகளாக முடியும். அதுவே நம்மை இறைவனிடம் சேர்க்கும்.

உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் அனைத்தையும் உதறிவிட்டு எளிமையைத் தேர்ந்தெடுத்த மனிதர். தானே சமைத்து, தானே பயிரிட்டு வாழ்ந்தார். பல கோடி மக்களை எழுத்துகளால் கட்டிப் போட்டவர், எளிமையை அரவணைத்து அதுவே மிக உயர்ந்தது என எழுதினார். அவர் கைகளில் பேனா இருந்தது, இதயத்தில் எளிமையே நிரம்பியது.

எளிமை என்பது ஒரு வகை ஆராதனை. அது இறைவனிடம் சொல்கிறது, 'எனக்கு நீர் மட்டும் போதும்'! எனது மதிப்பு என்பது நான் என்ன அணிகிறேன், என்ன வாகனம் வைத்திருக்கிறேன், எந்த வீட்டில் இருக்கிறேன் என்பதிலல்ல! 'நான் யாராக இருக்கிறேன்' என்பதில் தான். எளிமையாய் வாழுங்கள். அதைக் கட்டாயத்தினால் அல்ல, இறைவன் மேல் உள்ள அன்பினால், அவர் போதும் எனும் திருப்தியினால் செய்யுங்கள்.

அதையே பெரிய மனிதர்கள் செய்தார்கள். அதையே நாமும் செய்ய நம்மை அவர்கள் ஊக்குவிக்கிறார்கள்.

## மனிதனின் சிறப்பு

**சொல்லிட்டு வருவது**
**பிறந்த தேதி**
**சொல்லாமல் வருவது**
**இறந்த தேதி**
**இந்த இரண்டுக்கும்**
**நடுவில் சந்தோசமாக**
**வாழ்ந்து காட்டுவதே**
**மனிதனின் சிறப்பு**

**ம. டேவிட் டிலன்,**
முளகுமூடு.

## அன்பு

**உண்மையின் தேடலில்**
**கண்டெடுத்த வைரங்கள்**
**நலமும் வளமும் மகிழ்வும்**
**நாள்தோறும் அரணாக**
**கோட்டையாக சிறகாக**
**நிழலாக நம்மை**
**பொதிந்து காக்கும்**
**நம்பிக்கையின் உறுதி**
**அன்பாகும்**

**மா. டெயிசி,**
நல்லாயன்புரம்.

# மருத்துவமும் இறைமையும்

Dr. **கரோலின்**

ஆண்டவரே மருத்துவரைப் படைத்தார் (சீராக் 38: 1) ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே இவ்வுலகம் மருத்துவராக செயலாற்ற முடியும். இத்தகைய மருத்துவர்கள் தங்களது பணியை சிறப்புறச் செய்வதற்கு இறைவனோடு நெருங்கிய உறவு கொண்டிருக்க வேண்டும். ஜெபத்தோடும், இறை சிந்தனையோடும் இருந்தால் மட்டுமே ஒரு அர்பணிக்கப்பட்ட மருத்துவராக பணிபுரிய முடியும். அத்தகைய மருத்துவர் கருணையும் ஒழுக்கமும் கொண்டவராகவும் நோயாளியை மையமாக வைத்து செயலாற்றுபவராகவும், தாழ்மையுள்ளவராகவும், தைரியமுள்ளவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் இருப்பார். இன்றைய சூழலில் இந்த இலக்கோடு பணிபுரிவதற்கு தமது சுயநல நாட்டங்கள் பண ஆசை, போட்டி மனப்பான்மை, பதவி ஆசை ஆகியவை தடையாக உள்ளது. இவற்றை மேற்கொள்ள நமது இறைவனோடு நாம் கொண்டுள்ள தொடர்பும், உறவும் மட்டுமே துணை புரியும் எனவே கிறிஸ்தவ மருத்துவரான நாம் இறைவனோடு வைத்துள்ள உறவை அலசிப் பார்ப்போம் பலப்படுத்துவோம். தூய ஆவியின் அருளால் நாம் ஆவியின் கனிகளை பெற்று அவற்றை பிறருக்கும் பகிர்ந்தளிப்போம்.

இறைவனின் உண்மை தன்மையின் நோக்கமான (யோவான் 10: 10) நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன் என கூறியுள்ளார். மனிதன் முழுமை பெற வேண்டும் என்பதே இறைவனின் நோக்கம். ஓர் உண்மையான அற்பணிக்கப்பட்ட மருத்துவரின் நோக்கம் அதுவே. மனிதன் முழுமை பெற வேண்டும் முழுமையான நலம் பெற வேண்டும் என்பதாகவே இருக்க முடியும். அந்த வகையில் இறைமையும் மருத்துவமும் ஒரே நோக்கம் கொண்டவை. இறைமை சொல்லப் போனால் மருத்துவம் என்பதே இறை ஆண்மையின் வெளிப்பாடாக, அடையாளமாக அமைகின்றது என்பதே உண்மை. ஏன் என்றால் உண்மையான மருத்துவ முறை ஒரு மனிதனை முழுமையான வாழ்விற்கு அழைத்துச் செல்கின்றது. ஒரு மனிதனின் முழுமையான வாழ்வு என்பது அவனுடைய உடல் நலம் சார்ந்தது மட்டுமல்ல, மாறாக அவனது மன நலத்தையும் உள்ளடக்கியது. ஒருவன் மனநலம் குன்றி இருக்கின்ற போது அவனது உடலை மட்டும் ஆரோக்கியமாக வைத்து இருப்பது சாத்தியமில்லை. அதுபோன்று ஒருவரது உடலில் வாதைகள் ஏற்படும் போது அது அவனுடைய நிலையையும் பாதிக்கின்றது.

ஏன் என்றால் மனமும் உடலும் நெருங்கிய தொடர்புடையது. இன்றும் ஆழமாக சிந்தித்தோ மேயானால் உடலும் மனமும் ஒன்று என்று புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு உண்டு.

இத்தகைய ஒரு புரிதலை தான் நாம் சங்க இலக்கிய சுவடுகளிலும், சித்த மருத்துவ முறைகளிலும் காணக் கிடைக்கின்றது.

இதுதான் ஒரு மருத்துவர் என்ற முறையில் இறைமகன் இயேசுவின் நிலைப்பாடாகவும் இருந்தது. ஆகவேதான் இயேசுவின் குணமளித்தல்கள் அனைத்துமே உடல் நலத்தை மட்டுமே நோக்காமல் ஒருவருடைய மனநிலை சார்ந்த எண்ணங்களை மாற்றி அதன் மூலம் இயேசு நோயாளிகளின் நோய்களை குணமாக்குகின்றார் .

"உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" (லூக்கா 18: 42). "உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" (மத்தேயு 9: 22).

இயேசு உடலையும் உள்ளத்தையும் ஒருமைப்படுத்துகின்றார். இவ்வாறு ஒருமையை உருவாக்கி முழுமையான வாழ்வுக்கு அழைத்துச் செல்பவரே நம் ஆண்டவராகிய இயேசு.

இத்தகைய அணுகுமுறையே ஒவ்வொரு மருத்துவரின் மற்றும் 'மொத்த மருத்துவதுறையின் அடித்தளமாக அமைய வேண்டும்'. இதை மனதில் கொண்டு ஒவ்வொரு மருத்துவரும் இறைமகன் இயேசுவின் மனப்பாங்கைக் கொண்டு உண்மையான மருத்துவ சேவையை செய்வார்களாயின் அது இவ்வுலகத்தின் இறையரசையும் நிலைநாட்டும்.

# உயிரியல் பூங்கா நன்மைகள் மேன்படுத்தும் வழிமுறைகள்

Dr. ஏஞ்சலின் ஆஷா BNYS,
CHDP சுங்கான்கடை

உயிரியல் பூங்கா என்பது பல்வேறு அல்லது ஒரே இனத்தை சார்ந்த அரிய வகை விலங்குகள், தாவரங்கள், பறவைகள் அல்லது கடல் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு, வளர்ச்சி, இனப் பெருக்கம், கல்வி மற்றும் ஆராய்ச்சி நோக்கத்திற்காக உருவாக்கப்படுகின்றது. மக்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களை கண்டறிந்து விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ளும், பொழுதுப்போக்கு இடமாகவும் உயிரியல் பூங்காக்கள் அமைகின்றது. இது குழந்தைகளை மட்டும் அல்லாமல் பெரியவர் களையும் கவரும் இடமாக அமைகின்றது.

**உயிரியல் பூங்காவின் நன்மைகள்** :-

**இயற்கை சூழலை பாதுகாத்தல்** :-

இன்றைய சூழலில் பூமி வெப்பமயமாதல் என்பது முக்கிய பிரச்சனையாக இருக்கின்றது. காடுகளை பாதுகாக்கும் மரங்களை வளர்க்க வேண்டியது கட்டாயமான ஒன்று. உயிரியல் பூங்காக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் அதன் பயன்பாட்டை மேன்படுத்துவதற்கும் இயற்கையை பாதுகாப்பதற்கும், காற்று மற்றும் ஒலியினால் எழும் மாசுபாட்டை கட்டுப்படுத்தவும் உதவுகின்றது.

**விலங்குகளைப் பாதுகாத்தல்** :

அழிந்து வரும் உயிரினங்களை (இந்தியக் காண்டாமிருகம்) இனப்பெருக்கம் செய்து பாதுகாப்பதில் உயிரியல் பூங்காக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. விலங்குகளுக்கு ஆரோக்கியமான உணவு மற்றும் பாதுகாப்பான வாழ்விடத்தை வழங்குவதன் மூலம் அவற்றின் ஆயுட்காலத்தை அதிகரிக்க உதவுகின்றன.

**கல்வி மற்றும் ஆராய்ச்சி** :-

உயிரியல் பூங்காக்கள் விலங்கினங்களைப் பற்றிய அறிவை மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஒரு தளமாக செயல்படுகின்றன. மேலும் அழிந்து வரும் இனங்களை பாதுகாப்பதற்கான முக்கியதுவத்தையும், விலங்குகளின் நடத்தை, உயிரியல் மற்றும் நோய்களைப் பற்றி ஆய்வு செய்வதற்கும் உதவுகின்றன.

**பொருளாதார நன்மைகள்** :-

உயிரியல் பூங்காக்கள் சுற்றுலாத் தலங்களாக இருந்து, பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றது. உள்ளூர் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அதிகரிக்கின்றது.

**உயிரியல் பூங்கா மேம்படுத்த சில தகவல்கள்** :-

உயிரியல் பூங்காக்கள், விலங்குகளை அடைப்புக்குள் வைத்திருப்பது மற்றும் செயற்கையான சிறிய வாழ்விடம் போன்ற விவாதங்கள் உள்ளது. அவற்றை சரிசெய்ய விலங்குகளுக்கு இயற்கை சூழல், இயற்கை தண்ணீர், பரந்த வாழ்வியல் சூழல் அமைத்து கொடுப்பது முக்கியம்.

உயிரியல் பூங்காக்கள், விலங்குகளைப் பாதுகாப்பதில் ஒரு பயனுள்ள கருவியாக இருந்தாலும் விலங்குகளின் சுதந்திரம் மற்றும் இயற்கை இனப்பெருக்கம் மற்றும் வாழ்வியல் காரணிகளை பாதிப்பதாக கருதப்படுகின்றது.

சில உயிரியல் பூங்காக்கள் இலாப நோக்கத்தை மட்டுமே கொண்டு செயல்படுவதால் விலங்குகளின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அரசும் பொது மக்களும் விலங்கினங்களை கருத்தில் கொள்ளாத உயிரியல் பூங்காக்களை மீட்டெடுத்து பாதுகாக்க வேண்டும்.



# நன்றியுணர்வோடும் நம்பிக்கையோடும்

அருள்பணி. ம. டைட்டஸ் மோகன்

**மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ்**

2013 யில் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாளிலேயே



"எனக்காக தயவுசெய்து ஜெபியுங்கள்" என்று வேண்டி, தலைவணங்கி இறைமக்களின் ஆசியைப் பெற்றது. முதல் புரட்சி, அரசவை மாளிகையை விட்டு வெளியேறியது. தங்குமிட விடுதிகளில் தங்கியது இன்னொரு முயற்சி ஏழ்மையின் உருவான புனித பிரான்சிஸ் பெயரைத் தேர்ந்தது மற்றொரு எழுச்சி அணியும் உடையிலும் ஆடம்பரம் தவிர்த்தது இன்னொரு முயற்சி. இத்தகு அடக்கமான தொடக்கமே திருத்தந்தை பிரான்சிஸ் யார் என்றும், இனி இரக்கம், கனிவு, அன்புதான் திருஅவையின் மூலக்கூறு என்பதனையும் இவ்வுலகு கண்டுகொண்டது.

ஏழைகளின் குரலாக உரோமின் தெருக்களில் பிச்சை எடுக்கும் வறியோரைத் தழுவிய நிகழ்வுகள், நாடுகடந்த அகதி முகாம்களுக்கு மேற்கொண்ட தனிப்பட்ட சந்திப்புகள், வேண்டும் நமக்கு போர்க்கள் மருத்துவமனையான திருஅவை என்கிற வலியுறுத்தல்கள்.

சமூக நீதிக்கான போராட்ட குரலாக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை "கட்டாயப் பாவம்" என்கிற கடுமையானக் கண்டிப்பு. உலக வங்கியின் முன்னால் பணம் ஊழலை ஏற்படுத்துகிறது' என்று இடித்துரைத்த துணிச்சல், மரண கலாச்சாரத்தை எதிர்த்தது, மனித கடத்தல், அடிமைத்தனம் போன்றவற்றை "மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்கள்" என முழங்கியது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குரலாக 'இறைவா உமக்கே புகழ்' என்கிற சுற்றுச்சூழல் சுற்றறிக்கை வெளியிட்டு புதுமை படைத்தது. "பூமி நமது பொது வீடு" என்ற கருத்தை உலகளாவிய ரீதியில் பரப்பியது; பொது போக்குவரத்து பயன்படுத்தல் போன்ற எளிய வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டியது...

மனிதநேய எல்லைகளை விரிவுபடுத்தும் குரலாக - இஸ்லாமிய அகதிகளுக்கு திருத்தந்தையருக்கு உரிய தனது வீட்டிலே இடம் கொடுத்தது; திருமணம் முறிந்தோரைத் திருஅவையில் வரவேற்றது. மூன்றாம் பால்நிலையினரை நான் தீர்ப்பிட யார்? என்றது...

அமைதி மற்றும் சமரசத்திற்கான முயற்சிகளின் குரலாக - தென் சூடான் அமைதி பேச்சுவார்த்தைகளில் ஈடுபாடு, கியூபா - அமெரிக்க உறவுகளை மென்மையாக்கியது. உக்ரைன் போரின்போது அமைதிக்கான அழைப்பு விடுத்தது...

கொரோனா காலத்தில் நம்பிக்கையின் குரலாக - அறைகளுக்குள் உலகமே முடங்கிக்கிடக்க, வத்திக்கான் சதுக்கத்தில் வெறுங்காலுடன் வேண்டுதல் செய்து உலகிற்கு ஆறுதல் அளித்தது...

இப்படி கடந்த 2013 ஆண்டு முதல் 2025 ஏப்ரல் 21 ஆம் நாள் வரை திருஅவை

தோட்டத்தை ஏழைகளின் இருப்பிடமாக்கி, அன்பு என்னும் நீர்பாய்ச்சி ஒற்றுமை என்னும் வருவூட்டி, வன்முறை என்னும் களையகற்றி, சமத்துவம் பூக்கச் செய்த ஏழைகளின் ஏந்தல் 'உரோம் மக்களின் மீட்பர்' (Salus Populi Romani) எனும் அன்னையின் மடியில் நிம்மதியாய் துயில் கொள்கிறார் அவர் ஆன்ளமா அமைதியில் இளைப்பாறட்டும்!

**புதிய திருத்தந்தை 14 ஆம் லியோ**

69 வயதுடைய கர்தினால் ராபர்ட் பிரான்சிஸ் ப்ரவோஸ்ட் அவர்கள் திருஅவையின் 267 ஆவது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். அருஸ்தீன் சபையைச் சார்ந்த முதல் திருத்தந்தை என்னும் புகழ் பெற்ற திருத்தந்தை அவர்கள் பதினான்காம் லியோ



என்னும் பெயரினை தனது பெயராக ஏற்றுள்ளார். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்குப் பின் திருஅவை பொறுப்பேற்கும் அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த இரண்டாவது திருத்தந்தையாவார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடக்குப் பகுதியில் பிறந்து தெற்கில் பணியாற்றிய பெருமைக்குரியவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கத்தோலிக்க மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும், திருஅவை ஆயர்பேரவைக்கான தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவிற்கான திருஅவை ஆணையத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

புதிய திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், 1955 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று சிகாகோவில் உள்ள இல்லினோய்ஸ் என்னுமிடத்தில் பிறந்தவர். இவரது தந்தை Louis Marius Prevost பிரெஞ்சு மற்றும் இத்தாலிய மொழி பேசும் வம்சாவளியைச் சார்ந்தவர் Mildred Martínez இஸ்பானிய மொழி பேசும் வம்சாவளியைச் சார்ந்தவர். இவருக்கு தூயிஸ் மார்டின் மற்றும் ஜான் ஜோசப் என்னும் இரண்டு சகோதரர்கள் உள்ளனர்.

தனது குழந்தைப் பருவத்தையும், இளமைப் பருவத்தையும் அமெரிக்காவில் கழித்த திருத்தந்தை அவர்கள் முதலில் புனித அருஸ்தின் சபையின் இளங்குருமடத்தில் கல்வி கற்றார் அதன்பின்னர், பென்சில்வேனியாவில் உள்ள வில்லானோவா பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார் 1977 ஆம் ஆண்டில் அப்பல்கலைக்கழகத்தில் கணிதத்திலும் தத்துவ இயலிலும் பட்டம் பெற்றார். அதே ஆண்டு செப்டம்பர் 1 ஆம் நாள் சிகாகோவில் உள்ள செயிண்ட் லூயிஸில் உள்ள அருஸ்தீன் (OSA) துறவற இல்லத்தில் இணைந்து துறவறப் பயிற்சி பெற்றார். 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் 2 அன்று தனது முதல் வார்த்தைப்பாட்டினையும், 1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29, அன்று அவர் தனது நிரந்தர வார்த்தைப்பாட்டினையும் அளித்தார்.

சிகாகோவில் உள்ள கத்தோலிக்க இறையியல் ஒன்றியத்தில் இறையியலில் பட்டம் பெற்ற திருத்தந்தை 14 ஆம் லியோ அவர்கள், தனது 27 ஆவது வயதில் உரோமில் உள்ள ஆஞ்சலிக்கம் திருப்பிடப் பல்கலைக்கழகத்தில் திருஅவைச் சட்டம் பயில்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். பின் 1952 ஆம் ஆண்டு 19 ஆம் நாள் சாந்தா மோனிகாவின் அருஸ்தினியானோ கல்லூரியில் பேராயர் Jean Jadot அவர்களால் குருத்துவ அருள்பொழிவு செய்யப்பட்டார்.

1984 ஆம் ஆண்டு முதுகலைக் கல்வியைப் பெற்ற திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், அடுத்த ஆண்டு (1985) தனது முனைவர் பட்ட ஆய்வறிக்கையைத் தயாரிக்கும்போது. பெருவின் பியூராவில் உள்ள அனுகானாஸிற்கு அருஸ்தின் சபை

மறைப்பணிக்காக (1985-1956) அனுப்பப் பட்டார். 1987 ஆம் ஆண்டில், தனது முனைவர் பட்ட ஆய்வறிக்கையை சமர்ப்பித்த திருத்தந்தை அவர்கள் இல்லினோய்ஸின் ஒலிம்பியா ஃபில்ட்ஸில் உள்ள லிதல் ஆலோசனை அன்னை' என்ற அகஸ்டினியன் மறை மாநிலத்தின் இறைஅழைத்தல் இயக்குனராகவும், மறைப்பணி இயக்குனராகவும் நியமிக்கப்பட்டார். 1999ஆம் ஆண்டில் சிகாகோவின் அகுஸ்தின் சபை மறைமாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் அருஸ்தீன் சபைத் தலைவராக முதன்முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் 2007- ஆம் ஆண்டு இரண்டாவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2013-ஆம் ஆண்டு தனது சிகாகோ மறைமாநிலத்திற்குத் திரும்பிய திருத்தந்தை அவர்கள், சபையின் முதல் ஆலோசகர், இறைஅழைத்தல் இயக்குநர் என பல பொறுப்புக்களை ஏற்றார். 2014 ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பெருவின் சிசுலாயோ மறைமாவட்ட அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும் அதே நேரத்தில் சுஃபார் மறைமாவட்டத்தின் பட்டம்சார் ஆயராகவும் நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு டிசம்பர் 12 ஆம் நாள் குவாதலூப்பே அன்னை மரியா விழாவன்று அன்னை மரியா பேராலயத்தில் ஆயராக அருள்பொழிவு செய்யப்பட்டார்.

2015 செப்டம்பர் 26. அன்று சிக்லாயோ மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டு, 2018 மார்ச் மாதம் பெரு மறைமாவட்ட ஆயர் மாநாட்டின் இரண்டாவது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதில் அவர் பொருளாதார கவுன்சிலின் உறுப்பினராகவும் கலாச்சாரம் மற்றும் கல்வி ஆணையத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றார். 2019 ஆம் ஆண்டில், திருந்தந்தை பிரான்சிஸ் இவரை அருள்பணியாளர்களுக்கான அவையின் உறுப்பினராகவும், அடுத்த ஆண்டு (2020) ஆயர்களுக்கான அவையின் உறுப்பினராகவும் இணைத்தார். அதே ஆண்டு, ஏப்ரல் 15 அன்று பெருவின் கல்லோ மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டார்

2023 ஆம் ஆண்டு ஜனவரி 30, அன்று ஆயர்களுக்கான திருப்பிடத்துறையின் தலைமைத் தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவிற்கான திருப்பிடச்சங்கத்தின் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டு உரோமிற்கு வந்த திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களைப் பேராயராக நியமித்தார். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி நடைபெற்ற கர்தினால்கள் அவையில் அவரைத் கர்தினாலாக அறிவித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது கடைசி திருத்தூதுப் பயணங்களிலும் பங்கேற்றவர். 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 4 முதல் 29 வரை மற்றும் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 2 முதல் 27 வரை உரோமில் நடைபெற்ற 16ஆவது உலக ஆயர்கள் முதல் மற்றும் இரண்டாவது மாமன்றத்தில் பங்கேற்றவர். அருஸ்தீன் சபை தலைவராகவும், அனைத்து துறவற சபைத்தலைவர்கள் ஒன்றியத்தின் (USG) பிரதிநிதியாகவும் அனுபவம் பெற்றவர்.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் 4 அன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நற்செய்தி அறிவிப்புப் பணிகளுக்கான திருப்பிடத்துறை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மூன்று நாள்களுக்குப் பின் அதாவது பிப்ரவரி 9 அன்று வத்திக்காவில் சிறப்பிக்கப்பட்ட காவல் மற்றும் ஆயுதப்படை வீரர்களுக்கான யூபிலி திருப்பலியினை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து சிறப்பித்தவர். மறைந்த திருத்தந்தை பிராளரிஸ் அவர்கள் உடல் நலமின்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவரது உடல் நலத்திற்காக 2015-ஆம் ஆண்டு மார்ச் 3 அன்று வத்திக்கான வளாகத்தில் சிறப்பு செபமாலையை வழிநடத்தியவர் திருஅவையின் புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களின் பணி சிறக்க தொடர்ந்து ஜெபிப்போம்.



# மன்னிப்பு
# கிறிஸ்தவத்தின் அடையாளம்

அருள்பணி **வ. இரபேல்**

கிறிஸ்தவம் யூத சமயத்தின் நம்பிக்கைகளையும் விதிமுறைகளையும் புரட்சி கண்ணோட்டத்தில் நோக்கி உருவான புதிய இலக்காகும். அதில் உயர்ந்த அறநெறிகள் பல இலக்கானாலும்,அன்பான வெளிப்பாடாக அமையும் மன்னிப்பு கிறிஸ்தவத்தை மனித சமுதாயத்தில் தனித்துவம் மிக்கதாக அடையாளப்படுத்துகிறது.

கிறிஸ்தவம் தன் அடிப்படையாகக் கொண்டுள்ள திரு விவிலியம் மன்னிப்பு என்பதை அடிப்படையில் கடவுளின் செயலாக காண்கிறது.அச்செயல் மூலம் கடவுள் நம்மிடமிருந்து மனிதரைப் பிரிக்கும் தடைகளை அருள் கூர்ந்து அகற்றுகிறார். அதன் மூலம் ஒப்புரவு, அன்பு, உறவு ஆகியவற்றுக்கான வழி திறக்கிறது. இரண்டாவதாக, மனிதர் தமக்கு அடுத்து இருப்பவரை மன்னிப்பது இதில் அடங்கியுள்ளது, இந்தக் கோணம் சிறப்பாக இயேசுவின் கற்பித்தலில் மேலோங்கி நிற்கிறது.

**பழைய ஏற்பாட்டில்**

கடவுள் எல்லாம் வல்லவராக இருக்கிறார். அவர் மனிதருக்கு வேண்டிய எல்லா ஆசிகளையும் வழங்குகிறார். ஆனால், பாவம் மனிதரை கடவுளிடமிருந்து பிரிக்கும்போது, மனிதரால் கடவுளின் ஆசியை அனுபவிக்க இயலாது கடவுள் தூயவராகவும் இருக்கிறார் .அவர் தீமையையும் தூய்மை கேட்டையும் சகித்துக் கொள்ள இயலாது.

ஆனால், இஸ்ரேலின் கடவுள் இரக்கம் உள்ளவராகவும் இருக்கிறார் (அர 8;23; திபா 13:5; எசா 60:10). பாவிகளின் இறப்பில் அவருக்கு மகிழ்வு இல்லை, தான் செய்து கொண்ட உடன்படிக்கை வழியாக கடவுள் தம் இரக்கத்தையும் பேரன்பையும் இஸ்ரயேலருக்கு வழங்குகிறார்.

மனிதருக்கு மன்னிப்பு தேவை, பாவம் என்பது அடிப்படையில் மனிதரின் ஆளுமையை



குலைப்பதாகும். பாவம் என்பது கீழ்படியாமை எனவும், கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றாமல் அலைந்து திரிந்து (திபா32:1,5; 51:2) எனவும்,

மீறுதல் அல்லது அக்கிரமம், அதாவது கூட்டத்தை மனப்பூர்வமாக மீறுவது (எசா 53:8; 59:20; மீக் 3:8) எனவும் பலவாறு பழைய ஏற்பாடு பகிர்கிறது. ''அவர்களுடைய கடவுளிடம் திரும்பி வர அவர்களின் செயல்கள் விடுவதில்லை, ஏனெனில் விபச்சார புத்தி அவர்களை ஆட்கொண்டுள்ளது. ஆண்டவரைப் பற்றிய அறிவு அவர்களுக்கில்லை'' (ஓசே 5:4) எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வகையில் பாவம் என்பது ஓர் அடிமைத்தனமாகும்.

இதன் காரணமாக, மனிதன் கடவுளோடு உள்ள அன்புறவை மறந்து விடுகின்றனர். வாழ்வில் மூலத்திலிருந்து அவர்கள் புறம் தள்ளப்படுகின்றன; அவர்களின் ஆன்மா முடங்கி விடுகின்றது, மனிதர்கள் கடவுளின் சினத்திற்கு இலக்காகின்றனர்.

ஆனால் மன்னிப்பு என்பது சித்தகு தடைகள் யாவற்றையும் அகற்றுகிறது. பாவம் இதனால் துடைக்கப்படுகிறது. மனிதரின் பாவங்கள் அனைத்தையும் அவர்களது முதுகுக்கு பின்னால் கடவுள் எறிந்து விடுகிறார். (எசா 38:17) அவர் மனிதரின் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்து விடுவார். (மீக் 7:19) மன்னிப்பு கடவுளுடன் உள்ள அன்புறவை மீண்டும் புதுப்பிக்கிறது. மனிதர் வாழும் இடம் யாவும் கூட புதிய தோற்றத்தையும் பெறுகின்றது படைக்கப்பட்ட உலகம் மனிதருக்காக மீண்டும் தூய்மைப்படுத்தப் படுகிறது. சமூகத்திலும், குடும்பத்திலும் புதிய உறவுகள் மலர்கின்றன. குற்றப்பழி உணர்வும் தண்டனை தீர்ப்பு குறித்த அச்சமும் மறைந்து அமைதிக்கான வழி பிறக்கிறது. மனிதரின் ஆன்மா நலம் பெற்று அவர்களின் ஆளுமையின் வல்லமைகள் புதுப்பிக்கப்பட்டு வலுப்பெறுகின்றன.

மன்னிப்புக்கான வழிகள் மூன்று உள்ளன. ஒன்று உடன்படிக்கை பாவம் மன்னிக்கப் படுவதற்கான வாய்ப்பு உண்டு எனஇஸ்ரவேல் உறுதியாய் நம்புகிறதற்கான அடிப்படை. அது கடவுளுடன் உடன்படிக்கை உறவில் நுழைந்ததில் அடங்கியுள்ளது. இந்த மன்னிப்பை பெறுவதற்கு முக்கிய கருவி பலி மற்றும் சடங்குகளில் அமைந்துள்ளது பலி மற்றும் சடங்குகளின் பல்வேறு செயல்பாடுகள் மனிதர் கடவுளை நோக்கி நகர்வதை வெளிப்படுத்துகின்றது. மன்னிப்பை பெறுவதற்கான மூன்றாவது கருவி மனம் வருந்துவதாகும் இறைவாக்கினர் மனம் வருந்துதலையும் வாழ்வு முறையை மாற்றி கொள்ளுதலையும் ஓயாமல் வலியுறுத்தி வந்தது.

பழைய ஏற்பாட்டில் மன்னிப்பின் இலக்கு தூய்மையை புதுப்பித்தல் ஆகும்.கடவுளுடன் உள்ள நல்லுறவுக்கு தடையாய் இருப்பது அகற்றப்பட்டு கடவுளின் அருள் பெறப்பட்டு அவரது சினம் வெற்றிக் கொள்ளப்படுகிறது. தூய்மை என்பது ஆன்மா குணம் பெறுவதாகும். நாடு கடத்தல் காலத்திற்குப் பின்னர் மன்னிப்பு மூலம் தூய்மையாதல் மிகவும் வலியுறுத்தப்பட்டது.

**புதிய ஏற்பாட்டில்**

யூத ரபிகளில் யூத சமயம் மன்னிப்பு குறித்து புதிய தளங்களை உருவாக்கியுள்ளது. வெளிப்பாட்டு இலக்கிய இயக்கமும் இத்தகு தளங்களை உருவாக்கியுள்ளது. இந்நிலையில் திருமுழுக்கு யோவான் பாவ மன்னிப்புக்கான திருமுழுக்கை வலியுறுத்தினார்.

இயேசு மன்னிப்புக்கான இறைவாக்கினரின் அறை கூவலை வலுப்படுத்தினார். அவர் உள்ளார்ந்த தூய்மையையும் உண்மை தன்மையையும் வலியுறுத்தினால் வெளிப்படையாக மட்டுமல்லாமல் உள்ளார்ந்த முறையிலும் கடவுளின் திருவுளத்திற்கு அமைந்து நடத்தலை சட்டம் எதிர்பார்க்கிறது என இயேசு வலியுறுத்தினார். மன்னிக்கும் குணத்தை வலியுறுத்திய இயேசு மனம் வருந்துதல் என்பது பாவத்திற்கான மனத்தியர் கொள்வதாக மட்டும் நின்று விடாமல் மனிதர் தம்மை முற்றிலும் மாற்றி அமைத்தல் ஆக அமைய வேண்டும்

என்று வலியுறுத்தினார். மனிதர் அடுத்தவரை வன்னியா பெட்டில் தாங்களும் மன்னிக்கப்பட மாட்டார்கள் என்பதை இயேசு மீண்டும் மீண்டும் அழுத்தமாக உரைத்தார் (மத் 6:14; மாற் 11:25; லூக்11:4; 17:3) இயேசு உரைத்த மன்னிக்க மறுத்த பணியாள் பற்றிய உவமை கோபமாக முடிகிறது. ஏனெனில் அந்த ஆள் தன் உடன் பணியாளரை மன்னிக்க மறுத்தான். உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால், விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் அவர்களை மன்னிக்க மாட்டார் (மத் 18:23-35).

மன்னிப்பு குறித்த இயேசுவின் கற்பித்தலின் தனித்துவம் மனிதர் தமக்கு அடுத்து இருப்பவரை மன்னிக்க வேண்டும் என அவர் வலியுறுத்துவதில் உள்ளது. புதிய யுகத்தில் மன்னிப்பு என்பது மனம் வருந்துதல் மற்றும் நம்பிக்கை கொள்ளுதல் ஆகியவற்றின் மீது மட்டுமல்ல அடுத்தவரையும் மன்னிப்பதன் மீதும் அமைந்துள்ளது. இது ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டுதல் வலியுறுத்தப்படுகிறது ஏழு முறை மட்டும் சகோதரரை மன்னித்தால் போதுமானதா? என்னும் கேள்விக்கு ஏழு முறை மட்டுமின்றி எழுபது தடவை ஏழு முறை என நான் உனக்கு சொல்கிறேன் என்றார் இயேசு (மத் 18:21-22).

மன்னிப்பு குறித்து பழைய ஏற்பாடு கொண்டிருந்த கருத்தையே இயேசுவும் கொண்டிருந்தாலும் அதை புதிய சூழ்நிலையில் விளக்குகின்றார். மெசியாவுக்குரிய ஆசியுடனும் புதிய யுகத்தின் புது அறந்ததியுடனும் அதை பொருத்திக் கூறினார். இதனால் தான் காணாமல் போன மகன் பற்றிய உவமையாலும் (லூக் 15), பரிசேயரும் வரி தண்டுபவரும் பற்றிய உவமையிலும் மன்னிப்பு குறித்து கூறப்படவே இல்லை. மன்னிப்பு குறித்து யூத ரபிகள் கொடுத்த விளக்கம் மிகவும் குறுகியது என ஏசு உணர்ந்திருக்கலாம்.

மன்னிப்பின் மேன்மையை தம் வாழ்வில் வெளிப்படுத்தி அதன் இலக்கணத்தை இயேசு நமக்கு தந்தார் (மாற்2:5). சிலுவையில் தொங்கும் போது தம் பகைவரையும் மன்னித்ததில் அதை வெளிப்படுத்தினார். இவ்வகையில் இயேசு அறையப்பட்ட சிலுவை மன்னிப்பின் உன்னத அடையாளமாக விளங்குகிறது. சிலுவையில் அறையப்பட்ட இயேசு தம்மை கொண்டவர்களையும் மன்னித்து அவர்களுக்காக மன்றாடியது உலகத்திற்கு ஓர் உன்னத செய்தியாக மாறி உள்ளது. அது மன்னிப்பு குறித்து அவர் தம் பணி வாழ்வில் கற்பித்தவற்றிற்கும் ஏன் அவர் கொடுத்த மற்ற போதனைகள் பலவற்றிற்குமே பொருள் தருவதாக அமைந்துள்ளது.

கடவுள் நம்மை மன்னித்து ஏற்றுக் கொள்கிறார். அவர் அன்பு மிக்கவராக இருக்கிறார் என்பது கிறிஸ்தவம் திரு விவிலியத்தின் வழி நின்று எப்போதும் வலியுறுத்தும் ஒன்றாகும். அது நமக்கும் உலகிற்கும் நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இயேசுவின் போதனையிலும் அவரது வாழ்விலும் இது நிறைவேறி மன்னிப்பு புது பொருள் பெறுகிறது. இயேசு கிறிஸ்துவும் மன்னிக்கும் கடவுளாக கிறிஸ்தவர் அல்லாதவரின் கண்களுக்கு தெரிகிறார். அவரை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்தவரும் திரு அவையும் அன்பின் அடிப்படையில் அமைந்த மன்னிப்பை முன்னிலைப்படுத்துகின்றன. புனித தேவன் மற்றும் பல புனிதர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளார்கள்.

மறைந்த திருத்தந்தை புனித இரண்டாம் ஜாண் பால் இதனை வெளிப்படுத்தினார். திருவிவிலியத்தை முக்கியமாக இயேசுவின் மலைப்பொழிவை வாசித்து அகிம்சை, சகிப்புத்தன்மை ஆகிய தம் போராட்டத்தில் கடைப்பிடித்த மகாத்மா காந்தி தம்மை துப்பாக்கியால் சுட்டுக் கொண்ட கோட்சேயை மன்னித்து இதை வெளிப்படுத்தியுள்ளார்.

# பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்

### 01. கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு

**மறைக்கல்விப் பணிக்குழு**

☆ 03.05.2025 புத்தன்கடை மறைவட்ட ஆண்டுவிழா புனித அகுஸ்தீனார் ஆலய அரங்கத்தில் நடைபெற்றது. "இறைவார்த்தை ஒளியில் மலரும் மறைக்கல்வி" என்ற தலைப்பில் பங்கிற்கு ஒரு கலைநிகழ்வு என்ற அடிப்படையில் கலைத்திறனாய்வு நடைபெற்றது. 627 பேர் பங்கேற்றனர்.

**விவிலியப் பணிக்குழு**

☆ மே மாதம் எல்லா பங்கு கிளைப்பங்குகளில் விடுமுறை விவிலிய வகுப்பு சிறப்பாக நடைபெற்றது.

### 02. இளைஞர் பணிக்குழு

**இளைஞர், இ.கி.மா.ஃஇ.மா இணைந்த செயல்பாடுகள்**

☆ 17.05.2025 மறைமாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் செங்கல் சூளையைச் சந்தித்து அவர்களின் வாழ்க்கை அனுபவத்தை கண்டறிதல் என்ற அடிப்படையில் கள ஆய்வும், இளம் கிறிஸ்தவ "மாணாக்கரின் பார்வை.." என்ற சிந்தனையில் பயிற்சியும் நடைபெற்றது. 25 பேர் பங்கேற்றனர்.

☆ 01.05.2025 வாழ்விற்கான உயர்கல்வி வழிகாட்டுதல் என்ற சிந்தனையில் முழுநாள் பயிற்சி வழங்கப்பட்டது. 414 பேர் பங்கேற்றனர்.

### 04. பெண்கள் பணிக்குழு

☆ 22.05.2025 முளகுமூடு மறைவட்ட களப்பயணம் பேச்சிப்பாறையில் நடைபெற்றது. "ஜூபிலி 2025 எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்ற தலைப்பில் வழக்கறிஞர் திருமதி. ஜோஸ்பின் பயிற்சி வழங்கினார்கள். 23 பேர் பங்கேற்றனர்.

### 04. அன்பியப் பணிக்குழு

☆ 03.05.2025 முளகுமூடு மறைவட்ட பொதுக்குழு கூட்டம் தக்கலை உதயதாரகையில் நடைபெற்றது. 35 பேர் பங்கேற்றனர் எழுவோம் இயக்கத்தினரால் "புற்று நோய் விழிப்புணர்வு" பயிற்சி வழங்கப்பட்டது.

☆ 25.05.2025 அன்று புத்தன்கடை மறைவட்ட பொதுக்குழு கூட்டம் மறைவட்ட குலசேகரத்தில் நடைபெற்றது. 25 பேர் பங்கேற்றனர். தாய சவேரியார் பல்நோக்கு மருத்துவமனை தாளாளர் அருட்பணி. சார்லஸ் விஜு அவர்கள் மருத்துவ பயிற்சி வழங்கினார்கள்.

☆ 10.05.2025 உண்ணாமலைக் கடையில் வைத்து மறைமாவட்ட அன்பிய பணிக்குழுவின் செயற்குழு கூட்டமும், மறைமாவட்ட நிர்வாகிகள் தோவும் நடைபெற்றது.

☆ கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக பங்கு ஒருங்கிணையம் சார்பாக ரூ.2.24,425.00 வழங்கப்பட்டது.

### 05. நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு

☆ திரித்துவபுரம், வெட்டுவெந்தி. தோட்டாச்சாணி, பாரதப்பள்ளி, பரக்குன்று. வாறுவிளை, இரவிபுதூர்கடை ஆகிய பங்குகளில் நற்செய்தி கொண்டாட்டம் நடைபெற்றது.

☆ 11, 12, 13 ஆகியநாட்களில் சிலுவைபுரம், 15, 16 ஆகியநாட்களில் முளவிளை ஆகிய ஊர்களில் தவக்கால தியானமும், 25, 26, 27 ஆகிய நாட்களில் காக்கவிளை பங்கில் நற்செய்தி கூட்டமும் நடைபெற்றன.

**06. சமூகத்தொடர்வுபணிக்குழு**

☆ மறைமாவட்ட குருத்துவ அருட்பொழிவு திருப்பலியானது மூவொரு இறைவன் ஆலயம், திரித்துவபுரத்திலிருந்து நேரடியாக Youtube channel -ல் ஒளிபரப்பப்பட்டது.

☆ அருள்பணி. டைட்டஸ் மோகன் அவர்கள் புதிய திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள் குறித்த நிகழ்வுகளை Youtube channel -ல் பதிவுச் செய்யப்பட்டது.

☆ தமிழர் பண்பாடு குறித்த ஆத்திசூடி மற்றும் கொன்றை வேந்தன் சிந்தனைகளர அருள்பணி சகாய தாசு அவர்களால் வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ் வழங்கப்பட்டது.

**07. சிறார் பணிக்குழு**

☆ 25.05.2025 வழிகாட்டிகள் பயிற்சி துண்டத்துவிளை மறைவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. 14 பேர் பங்கேற்றனர்.

**08. உளநல பணிக்குழு**

☆ 10.05.2025 உளநல பணிக்குழு ஆயர் அவர்களால் துவங்கி இலச்சினையும் திறந்து வைக்கப்பட்டது.

**அருள்பணி. நீ மார்ட்டின்**
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்

அடுத்த இதழ் "**சுதந்திர காற்றில் மனிதம் மலரட்டும்**" என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. புத்தாண்டு முதல் நமது புதிய தேடல் இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தங்களது கவிதை, கட்டுரை, கதை. துணுக்குள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-07-2025**-ம் தேதிக்கு முன் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஆசிரியர்**
**புதிய தேடல்**

# Engagements of the Bishop: June 2025

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Diocesan Level Conference – Catholic Seva Sangam | Choozhal | 03.00 pm |
| 02 | Commissions Coordination Meeting | Pastoral Centre | 03.00 pm |
| 03 | Curia | Bishop's House | 09.30 am |
| 06 | Feast Mass | Mullanganavilai | 06.30 pm |
| 07 | Mass at Sisters' Convent | Kollanchi | 07.00 am |
| 08 | Feast Mass | Paicadu | 09.00 am |
| 09 | Nanjil School Board Meeting | Vazhuthalampallam | 03.00 pm |
| | Feast Mass at Mulagumoodu Basilica | Mulagumoodu | 06.00 pm |
| 10 | Recollection | Annai Ada Centre | 09.30 am |
| 13 | Feast Mass | Vettuvenni | 11.00 am |
| | Confirmation Mass | Manali | 06.00 pm |
| 14 | Confirmation Mass | Palavilai | 09.00 am |
| | Feast Mass at Cathedral | Thirithuvapuram | 06.00 pm |
| 15 | Feast Mass at Cathedral | Thirithuvapuram | 09.30 am |
| 16 | Feast Mass | Karenkadu | 06.30 pm |
| 18 | TNBCLC Meeting | Tindivanam | |
| 20 | Contact Visit & Feast Mass | Kadayal | 05.30 pm |
| 21 | Finance Committee Meeting | Bishop's House | 03.00 pm |
| 22 | Mass at St. Xavier's Cathedral | Kottar | 08.00 am |
| 23 | KIDSS Board Meeting | Pastoral Centre | 03.00 pm |
| 24 | Senate | Bishop's House | 09.30 am |
| | Feast Mass | Thoothoor | 05.00 pm |
| 25 | VSCS New Building Foundation Stone Laying | Nagacode | 09.00 am |
| | Contact Visit & Feast Mass | Ambalakkadai | 05.30 pm |
| 28 | Diocesan Level BCC Kalaivizha | Mulagumoodu | 04.00 pm |
| 29 | Contact Visit & Confirmation Mass | Thiruvithancode | 09.00 am |
| | DPC Meeting | Unnamalaikadai | 03.00 pm |




பென்னி குரியாகோஸ்
அபிஷேகம்
கோல்டு & டைமண்ட்ஸ்

SM Arcade, பம்மம், மெயின் ரோடு
**மார்த்தாண்டம்**
9080752280, 7603928217

மெயின் ரோடு
**பாலராமபுரம்**
9388932662

மெயின் ரோடு
**அங்கமாலி**
9526561342

விழிஞ்ஞம் ரோடு
**பாலராமபுரம்**
7907032712

Date of Publishing : **19-03-2025**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office

Asha Hospital &
Svasti Fertility Centre

## லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை

- **லேபராஸ்கோபிக் ஸ்டெரிலைசேஷன்**
  (Laparoscopic sterilisation)
- **மொத்த லேப்ராஸ்கோபிக் கருப்பை நீக்கம்**
  (Total laparoscopic hysterectomy)
- **லேபராஸ்கோபிக் கருப்பை அறுவை சிகிச்சை**
  (Laparoscopic ovariancystectomy)
- **எக்டோபிக் கர்ப்பத்திற்கான லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சை**
  (Laparoscopic surgery for Ectopic pregnancy)
- **லேபராஸ்கோபிக் மயோமெக்டோமி**
  (Laparoscopic myomectomy)
- **ஹிஸ்ட்ரோஸ்கோபி நோயறிதல் / சிகிச்சை**
  (Hystroscopy diagnostic / therapeutic)
- **லேப்ரோசோபிக் அப்பென்டெக்டோமி**
  (Laprosopic appendectomy)
- **லேப்ராஸ்கோபிக் ஹெர்னியாவை சரிசெய்தல்**
  (Laparoscopic Hernia repair)
- **லேப்ராஸ்கோபிக் பித்தப்பை அகற்றுதல்**
  (Laparoscopic Gall bladder removal)

**குறைந்த ஆபத்து, விரைவான மீட்பு, குறைந்த வலி மற்றும் குறைந்த இரத்தப்போக்கு**

**குழந்தையின்மைக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்**

16-1c, Place Road, Thuckalay, Kanyakumari - 629175 **+91 99449 93755 | +91 93629 39381**

Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode